பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 02, திங்கட்கிழமை 18.09.2017 கதிர் 316

### 20ஆவது திருத்தத்தை ஏதோ வழியில் நிறைவேற்றி

# தேர்தலைத் தள்ளிப் போட அரசு பகீரதப் பிரயத்தனம்!

## சட்டவல்லுநர்களுடன் மும்முர ஆலோசனை

கொழும்பு, செப்ரெம்பர் 18

உயர்நீதிமன்றத் தீர்ப்பால் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்ற முடியாது இடைஞ்சலை எதிர்நோக்கும் அரசு, ஏதேனும் ஒரு வழியில் இருபதாவது திருத்தத்தின் அம்சங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, அதன் மூலம் உடனடியாக மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கும் முகம் கொடுக்கும் இக்கட்டிலிருந்து தப்புவதற்குப் பாடாய்ப்படுகின்றது.

தேர்தல்முறைகளைக் காட்டி, அதில் சீர் திருத்தம் செய்ய வேண்டிய அவசியத்தை முன்னிலைப்படுத்தி, இந்தத் தேர்தல்களைத் தள்ளிவைக்க வழிசெய்யும் சட்டமூலத்தை அவசர அவசரமாக நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியுமா என்பது குறித்து சட்ட வல்லுநர்களுடன் அரசுத் தலைமை இரவு பகலாக ஆலோசனை நடத்துவதாகத் தெரிகின்றது.

இதற்காகக் கொழும்பில் பகீரதப் பிரயத்தனம் முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. (உ)

## வடக்கில் இனி சீனாவின் ஈடுபாடு அதிகரிக்குமாம்

கொழும்பு, செப்.18

தமிழர்கள் மீது சீனா அதிக கரிசனை கொண்டுள்ளது. வடக்கில் சீனா அதிகளவு திட்டங்களை முன்னெடுக்கும் என்று சீனத் தூதரகத்தின் மூத்த அரசியல் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சீனா அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்காமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பக்கம் 18

## தமிழருக்கு சமஷ்டித் தீர்வை அரசு வழங்கப்போகிறதாம்!

### எச்சரிக்கின்றார் தினேஷ் குணவர்த்தன



கொழும்பு,செப்.18

சமஷ்டி மாதிரியான தீர்வொன்றை வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்துள்ளதாக கூட்டு எதிரணியின் பிரமுகரான தினேஷ் குணவர்த்தன எம்.பி. தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தின் அனைத்து

பக்கம் 18

## மஹிந்தவின் தரப்பு மைத்திரியுடன் பேச்சு

கொழும்பு, செப்.18

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிரணியின் பிரமுகர் குழு ஒன்று நேற்று முன்தினம் இரவு – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியிருக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா. பொதுச்சபை நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக நேற்று அமெரிக்காவுக்கு

பக்கம் 18

### ஜனாதிபதியும் பிரதமரும் திட்டவட்ட அறிவிப்பு

# கலப்புத் தேர்தல் முறைமையின் கீழேயே இனிவரும் மாகாணசபைத் தேர்தல்கள்

## உடனடித் தேர்தல் நடக்காது என்பதற்கான சூசகப் பிரகடனம்



கொழும்பு, செப்.18

இனிவரும் மாகாண சபைத் தேர்தல்களும் நாடாளுமன்றத் தேர்தல்களும் தொகுதிவாரி அடிப்படையிலேயே நடக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.

அதேசமயம், இனி நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தல் கலப்புத் தேர்தல் முறையில் தான் அமையும் என்று நேற்று அறிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்த அறிவிப்புகள் மாகாண சபைத் தேர்தல்கள் ஏதும் இப்போதைக்கு உடனடியாக நடைபெறுவதற்குச் சாத்தியமே இல்லை என்பதற்கான பிரகடனமாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாகாணத் தேர்தல் உடனடியாக வராதவாறு பார்த்துக்கொள்வதற்கான

பக்கம் 18






## 20ஆவது திருத்தத்தை மாற்றியமைத்து மாகாணத் தேர்தலை ஒத்திப்போடத் திட்டம்!

கொழும்பு, செப்.18

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி ஆகியவை பெற்றே இருபதாவது அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட முடியும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள நிலையில்–

அந்த இருபதாவது திருத்தத்தை மேலும் சில மாற்றங்களுடன் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேற்றுவதன் மூலம் உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறாமல் தடுக்க முடியுமா என அரசு ஆராய்கின்றது என நேற்றிரவு கொழும்பில் அரசியல்

பக்கம் 18

## பதில் பாதுகாப்பு அமைச்சராக ருவான் விஜேவர்த்தன நியமனம்

கொழும்பு,செப்.18

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமெரிக்கா சென்றுள்ள நிலையிலேயே இவர் பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பக்கம் 18

## பொருத்து வீடுகளுக்கு 60 ஆயிரம் பேர் விண்ணப்பமாம்!

கொழும்பு,செப்.18

வடக்கு,கிழக்கில் அறுபதாயிரம் பேர் பொருத்து வீட்டுக்கு விண்ணப்பித்துள்ளனர் என மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட–கிழக்கு மக்களுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் வீடுகள் தேவையெனவும், அங்கு 65ஆயிரம் பொருத்து வீடுகள்

பக்கம் 18

### சரியான அரசமைப்புத் திருத்தம் இல்லாமல்

## மாகாணத் தேர்தல்களை ஆணையகம் அறிவிக்கின்றமையைத் தடுக்க முடியாது

கொழும்பு,செப்.18

ஒரு மாகாண சபையின் பதவிக் காலம் முடிவடைந்ததும் அதற்கான தேர்தலை அறிவிக்கும் அதிகாரம் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் சுயாதீன தேர்தல் ஆணையகத்துக்குரியது. வேறு – புதிய – சரியான – அரசமைப்புத் திருத்தம் மூலம் அந்த அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டாலன்றி அடுத்த மாத முற்பகுதியில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தேர்தல் ஆணையம் அறிவித்து, அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதை யாரும் தடை செய்ய முடியாது.

–இவ்வாறு தேர்தல் ஆணைய வட்டாரங்கள்

பக்கம் 18

# தன்னிச்சைப் போக்கில் தமிழரசுக் கட்சியினர்!

### கடுமையாகச் சாடுகின்றது ஈ.பி.ஆர்.எல்.எவ்.



வவுனியா, செப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் கலந்து பேசி ஒருமித்த முடிவுகளை எடுக்காமல் கூட்டமைப்பின் பேரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னிச்சையாகச் செயற்படுவதாகக் கண்டித்திருக்கின்றது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

அக்கட்சியின் அரசியல் உயர் பீடத்தின் கூட்டத்தின் முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பக்கம் 18

# முகாம் வாழ்க்கையை விட மோசமாக வாழ்கின்றோம்!






வவுனியா, செப். 18

முகாம் வாழ்க்கையை விட மோசமாக வாழ்கின்றோம் என பூந்தோட்டம் முகாமில் இருந்து புளியங்குளம், பரசங்குளம் பகுதியில் குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, காணிகள் அற்ற நிலையில் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வவுனியா, பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதற்கு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் வவுனியா, நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்ன அடம்பன் இராசபுரத்தில் 150 வீடுகளை பயனாளிகளிடத்தில் கையளிக்கும் நிகழ்வு கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி. றோகணபுஸ்பகுமார தலைமையில் நடைபெற்றது.

லைக்காவின் ஞானம் அறக்கட்டளையின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இந்த 150 வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கலந்துகொண்டிருந்தார்.

சின்ன அடம்பன் இராசபுரம் பகுதியில் 68 வீடுகளும், புளியங்குளம் பரசங்குளம் பகுதியில் 82 வீடுகளும் அமைக்கப்பட்டு லைக்கா ஞானம் கிராமம் என பெயர் சூட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த ஜூன் மாதம் முதல் முகாமில் இருந்து வெளியேறி புளியங்குளம், பரசங்குளம் கிராமத்தில் லைக்கா ஞானம் அறக்கட்டளையால் அமைக்கப்பட்ட 82 வீடுகளிலும் குடியேறியுள்ள மக்கள் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கடந்த சில தினங்களாக வவுனியாவில் பெய்த கடும் மழை காரணமாக லைக்கா ஞானம் நிறுவனத்தால் வழங்கப்பட்ட வீடுகள் சிலவற்றின் கூரைகள் காற்றில் தூக்கியெறியப்பட்டுள்ளது. அங்கு அமைக்கப்பட்ட வீடுகளின் கூரைப்பகுதிகள், சமையலறையின் புகை போக்கும் பகுதி என்பவற்றின் ஊடாக மழை நீர் நேரடியாகவே வீட்டிற்குள் வருவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், கிராமத்தைச் சூழ அடர்ந்த காடுகள் காணப்படுவதால் யானைகள் வந்து செல்வதாகவும், அச்சத்துடனேயே தினமும் தங்களது வாழ்க்கையை கொண்டு நடத்த வேண்டியுள்ளதாகவும், மின் இணைப்புக்கள் கூட முழுமையாக வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கும் இம்மக்கள், முகாம் வாழ்க்கையை விட மோசமான நிலையிலேயே தற்போது வாழ்கின்றனர் எனவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

போதிய அடிப்படை வசதிகளோ, வாழ்வாதார உதவிகளோ இன்றி முகாம் வாழ்க்கையை விட மோசமாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்று இந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-100)

## பாணுக்குள் நீளமான உரைப்பை தைக்கும் நூல்

வவுனியா, செப். 04

வவுனியாவில் காலை உணவுக்காக பாண் வாங்கிய நபர் ஒருவர் அந்தப் பாணை வெட்டிய போது அதனுள் நீளமான உரைப்பை தைக்கும் நூல் காணப்பட்டுள்ளது.



நேற்றுக் காலை வவுனியா, சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் உள்ள கடை ஒன்றுக்குச் சென்ற நபர் பாண் ஒன்றை வாங்கியுள்ளார். வீட்டிற்குச் சென்று அப் பாணை வெட்டிய போது அதில் உரைப்பை தைப்பதற்கு பயன்படுத்தப்படும் பச்சை நிற நீளமான நூல் ஒன்று காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் பாண் விற்பனை செய்த வர்த்தகருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவர் நடத்த சம்பவத்திற்கு வருத்தத்தை தெரிவித்துள்ளார். (க-100)

## புத்தூரில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை சந்தித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 18

புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்திற்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த 68 நாள்களுக்கு மேலாக மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருக்கும் மயானங்களை அகற்றி மக்களின் வாழ்விடச் சூழலைப் பாதுகாத்து, கிராமியக் கட்டமைப்பை வலுப்படுத்தும் கோரிக்கையை முன் வைத்துப் புத்தூர் மேற்கு கலைமதி கிராம மக்கள் மண்டபத்திற்கு முன்னால் தொடர் கவனவீர்ப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வட மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் இந்த விடயம் தொடர்பாக நேற்று மு.ப. 10 மணியளவில் மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அங்கு முதலமைச்சர் உரையாற்றியவை வருமாறு:-

இந்த விடயம் நீதிமன்றுக்குச் சென்றுள்ளது. அதில் அரசியல் ரீதியாக நாம் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டால் நீதிமன்றுக்கு எதிரான செயற்பாடாக அமையும். நீதிவான் இது தொடர்பில் நடவடிக்கை எடுத்துள்ளார்.



ஆகவே, நாம் பொறுமையாக இருக்க வேண்டும். மயானம் இருப்பதாக தெரிந்தும் அங்கு குடியேற்றங்களை அமைத்தது முறையா என்ற கேள்வி உள்ளது. இதில் பல சட்ட பிரச்சினைகள் உள்ளது.

மக்களின் கோரிக்கை மற்றும் ஆதங்கங்களை எம்மால் புரிந்து கொள்ள முடியும். ஆனால், பொறுமையாகத்தான் இந்த விடயம் தொடர்பில் பரிசீலிக்க முடியும்.

மயானங்களை அகற்றி விட்டு மின்சாரத்தில் தகனம் செய்யும் செயற்பாட்டை அனைத்து இடங்களிலும் நடைமுறைப் படுத்த முடியாது, அதற்கான பொருளாதார வளம் மக்களிடம் இல்லை. இதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, இது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பதற்கு ஒருமாத காலம் தேவை, அது வரை பொறுமையாக மக்கள் இருக்க வேண்டும் என முதலமைச்சர் கோரிக்கை விடுத்திருந்தார்.

# அரசுக்கு முண்டு கொடுப்பதை கூட்டமைப்பு நிறுத்த வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு முண்டுகொடுக்கும் செயற்பாட்டிலிருந்து மீள வேண்டும் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறந்த சமூக சேவையாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றபோது அங்கு அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலட்சியத்திற்காகவே உருவாக்கப்பட்டது எனத் தெரிவித்துள்ள சிவசக்தி ஆனந்தன், கட்சியை அல்லது தனிநபர்களை வளப்படுத்துவதற்காக அது உருவாக்கப்பட்டவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள்போராட்டங்களுக்கு கூட ஒற்றுமையாகத் தலைமைத் துவத்தைக் கொடுக்க முடியாது, தாம் வெட்கித் தலைகுனிந்து நிற்கிறார் எனவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் மக்களின் வாக்குகளைப் பெற்று இராஜதந்திரமாக மக்களை ஏமாற்றியுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

# இந்த ராஜதந்திர வாய்ப்பை தமிழர் நழுவ விடக் கூடாது!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.18

தமிழ் மக்களுக்கு நல்லாட்சி அரசாங்கத்தில் கிடைக்கப் பெற்றுள்ள இராஜதந்திர சந்தர்ப்பங்களை இழந்துவிடக்கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவுமுள்ளியவளையில் சிறந்த சமூக சேவையாளர் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இன்று இருக்ககூடிய நல்ல சூழலை நாம் நிராகரித்தால்தமிழ் மக்கள் நிராகரிக்கப்படும் சந்தர்ப்பம் உருவாகும் என மாவை சேனாதிராசா இதன்போது தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழரசுக்கட்சி தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவைசேனாதிராசா மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (உ)

## காணாமற் போனோர் விவரம்:

# - இராணுவத்தினர் - குற்றம் புரியா விட்டால் ஏன் அஞ்ச வேண்டும்?

## சரத் பொன்சேகா கேள்வி

கொழும்பு, செப்.18

இராணுவத்தினர் எந்தக் குற்றங்களையும் – காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட எவற்றையும் – செய்யவில்லையாயின், காணாமற் போனோர் அலுவலகம்அமைப்பதுதொடர்பில் ஏன் அஞ்ச வேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

காணாமல்போனோர் விடயத்தில் பொறுப்புக் கூறுவதற்கே காணாமல்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களுடன் இராணுவத்தினருக்குத் தொடர்பு இல்லை என்றால் அவர்கள் பயப்பட வேண்டியதில்லையே. போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் இடம்பெறவில்லையாயின் இராணுவம் அச்சமடையத் தேவையில்லையே.

தலைநகரில் மாணவர்கள் கடத்தல்உள்ளிட்டசிலசம்பவங்களில் இவற்றை யார் செய்தார்கள் என்பது நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குற்றங்கள் கண்டறியப்பட வேண்டும். தண்டனைவழங்கப்படவேண்டும். நான் இராணுவத்தைக்காட்டிக்கொடுக்கவில்லை. குற்றங்கள்விசாரிக்கப்பட்டால், இராணுவம் அதிலிருந்து விடுவிக்கப்பட்டால், இராணுவத்திற்குத்தான் நற்பெயர் ஏற்படும் – என்றார் அவர்.

# வலி. வடக்கு பகுதி மக்களின் குறைகளை கேட்டார் சிறி எம்.பி.





யாழ்ப்பாணம், செப்.18

வலிகாமம் வடக்கு பகுதியில் ஊறணி, தையிட்டி, மயிலிட்டி முதலியமீள்குடியேற்றக்கிராமங்களுக்கு நேற்றுச் சென்றிருந்த நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அங்கு மக்களைச் சந்தித்து அவர்களின் குறைகள் மற்றும் தேவை கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

இதன்போது ஊறணி, தையிட்டி மக்கள் கூறு கையில்– மீள்குடியேற்றம்செய்யப்பட்டு 9 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படாத நிலைமை நீடிக்கிறது.

விசேடமாக கடற்றொழிலை அடிப்படை வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கும் மக்களுக்கு வலைகள் இதுவரை வழங்கப்படவில்லை.

மேலும் இறங்கு துறையும் அமைக்கப்படவில்லை. தற்போதுகடற்படையினர்அமைத்து கொடுத்தகொட்டில்ஒன்றையே கடற்றொழிலாளர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இறங்குதுறை அமைத்து கொடுக்குமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, இறங்குதுறை ஒன்றை அமைத்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் தற்போதுள்ள இறங்கு துறையில் வெளிச்சம் இல்லை.

கடற்றொழிலாளர்கள் தங்கியிருக்கவும், இரவுவேளைகளில் படகுகளை கட்டவும் வெளிச்சம்தேவைப்படுகின்றது.

எனவே அந்த பகுதியில் 'சோலார்' விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். – என மக்கள் கேட்டுள்ளனர்.

இறங்குதுறை அமைப்பதற்கு கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் ஒப்புதல் வழங்கப்படவில்லை என சிறீதரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

அதேபோல் மீள் குடியேற்ற பிரச்சினைகள் மற்றும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பாதைகள் விடுவிப்பு ஆகியன தொடர்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ச்சியாக அரசாங்கத்துடன் பேசிவருகின்றது.

தொடர்ந்தும்கலந்துரையாடி மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படும்எனநாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அங்கு உறுதியளித்தார்.

# தேசிய விபத்துத் தவிர்ப்பு வாரம்: இன்று முதல் 22 ஆம் திகதி வரை

'தேசியவிபத்துதவிர்ப்புவாரம்' இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இது எதிர்வரும் 22ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்றது.

தேசியரீதியில் விபத்துகளைத் தடுப்பதுதொடர்பானஆலோசனைக் குழுவின் வழிகாட்டலில் 'தேசிய விபத்து தவிர்ப்பு வாரம்' சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவினால்'முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பத்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் விபத்துக் காரணமாக வருடாந்தம்வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுகின்றனர்எனசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே தேசிய விபத்து தவிர்ப்பு வாரத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


தேசிய விபத்து தவிர்ப்பு வாரத்தின் முதல்நாளான இன்று திங்கட்கிழமை வீதி விபத்தை தவிர்க்கும் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


செவ்வாய்க்கிழமை அன்று சேவைத் தளங்களில் விபத்தை தவிர்க்கும் தினமாகும்.


மனைகளில் இடம்பெறும் விபத்துக்களை தவிர்க்கும் தினமாகபுதன்கிழமைபெயரிடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை ஆரம்பப் பாடசாலைகளில் இடம்பெறும் விபத்துக்களை தவிர்க்கும் தினமாகபிரகடனப்படுத்தப்பட்டுள்ளது வெள்ளிக்கிழமைபாடசாலைகளில் விபத்தைத் தவிர்க்கும் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் நேற்று திலீபன் நினைவு நிகழ்வு







தியாகி திலீபனின் 30 ஆம் ஆண்டு நினைவின் 3ஆம் நாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றுள்ளன.

நேற்றுக் காலை 11 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் திலீபனின் திருவுருவப்படத்திற்கான பொதுச்சுடரை மாவீரர் ஒருவரின் துணைவி மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஏற்றிவைக்க மலர் மாலையை மாவீரின் பெற்றோர் அணிவித்தனர். தொடர்ந்து திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.

இதில் புதுக்குடியிருப்பு கைவேலி பிரதேசத்தை சேர்ந்த மக்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள். கைவேலி முறிகண்டிப்பிள்ளையார் அறநெறி பாடசாலைமாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நினைவுரையைப் புதுக்குடியிருப்பு வணிகர் சங்க தலைவர் செல்வச்சந்திரன் ஆற்ற சிறப்புரையை ஜனநாயக போராளிகள் கட்சியின்செயலாளர் இளங்கதிர் நிகழ்த்தினார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## குறுக்குவழியில் அரசமைப்புத் திருத்தம்

மாகாணசபைத் தேர்தல்கள் சம்பந்தமான இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் தனது முடிவை உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவித்துவிட்டது.

உயர்நீதிமன்றத்தின் முடிவு யாது என்பதை நாளையே நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிப்பார். அதற்கு முன்னர் உத்தியோக பூர்வமாக அந்த முடிவை அறிந்திருப்பவர் ஒருவர்தான். அவர் ஜனாதிபதியே.

உயர்நீதிமன்றத்தின் முடிவு என்னவென்பது உத்தியோக பூர்வமாக வெளியிடப்படாவிட்டாலும், அதன் விவரம் கசிந்துவிட்டது. இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்படவேண்டும் என உயர் நீதிமன்றம் இரண்டு - ஒன்றாகப் பிரிந்து தீர்ப்பளித்து விட்டது.

அப்படி இருந்தும், அந்தத் தீர்ப்புக்கு - பரிந்துரைக்கு - சுழித்துக் கொண்டு, அந்த இருபதாவது திருத்தத்தின் மூலம் தான் அடைய எண்ணிய இலக்கை - உடனடியாக வரும் மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளி வைக்கும் நோக்கை - எட்டுவதற்கு விடாது வேறு வழிகளில் முயல்கின்றது அரசுத் தலைமை எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

இது விடயத்தில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு என்னவென்பதை அறிந்து கொண்டுள்ள ஜனாதிபதியே அது தொடர்பில் தான் எடுக்கவுள்ள செயற்பாடு குறித்துக் கோடிகாட்டியிருக்கின்றமை அவரின் அரசினது உள்நோக்கத்தை - கபடத் திட்டத்தை - அம்பலப்படுத்தி நிற்கின்றது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் அனுமதி பெறாமல் இருபதாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இயலாது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பின்பற்றுவதாயின், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் அனுமதியை பெறவேண்டும். குறைந்த பட்சம் அதற்குச் சில மாதங்களாவது தேவை.

ஆனால், அதற்கு முன்னர் - அதாவது இன்னும் இரண்டு வார காலத்தில் - மூன்று மாகாண சபைகளின் பதவிகாலம் முடிவடைய இருப்பதால், அது முடிவடைந்ததும் அந்த சபைகளுக்குரிய தேர்தலை தேர்தல் ஆணயகம் அறிவித்துவிடும். அது, தவிர்க்க முடியாதது.

ஆனாலும், அதைத் தவிர்க்கச் செய்யும் விதத்தில் ஓர் அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் அடுத்த சில நாள்களில் நிறைவேற்றிக்காட்டும் தந்திரோபாய உத்தியை அரசுத் தலைமை வகுத்து வருவதாகத் தெரிகிறது.

இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியைப் பெறவேண்டும் எனத் தீர்ப்பளித்துள்ள உயர்நீதிமன்றம், அந்தத் தீர்ப்புக்கான சட்டக் காரணங்களை அதில் விவரிக்கவில்லை எனக் கூறப் படுகின்றது.

இருபதாவது திருத்தத்தில் எந்தெந்த அம்சங்கள்- அல்லது பிரிவுகள் - அல்லது வாசகங்கள் - அல்லது விடயங்கள் - சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியை பெற வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகின்றன என்பது உயர்நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பில் இல்லையாம். வழமையாக இத்தகைய தீர்ப்புகளில் இது போன்ற விடயங்களையும், என்னென்ன விடயங்களை மாற்றி அமைத்தால் சர்வஜன வாக்கெடுப்பின்றி அந்தத் திருத்தத்தை நிறைவேற்றலாம் என்பவற்றையும் உயர் நீதிமன்றம் விவரிப்பதுண்டு. ஆனால், உயர்நீதிமன்று அப்படி விவரிக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் அரசமைப்பில் இல்லாத சூழலில் இந்தத் தீர்ப்பில் உயர்நீதிமன்றம் அவற்றை விவரிக்கவில்லை.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அரசுத் தரப்பு வியூகம் வகுத்திருப்பதாகத் தெரிகின்றது.

இந்த இருபதாவது திருத்தத்தில் இன்ன, இன்ன அம்சங்கள் தான் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளன என்று உயர்நீதிமன்றம் கருதியிருக்கலாம் எனத் தன்பாட்டில் சில விடயங்களை அரசுத் தரப்பே குறிப்பிட்டு, அவற்றை மாற்றிவிட்டு, இந்தத் திருத்தத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுகின்றோம் என்ற முயற்சியை அரசுத் தரப்பு ஆரம் பித்திருப்பதாகத் தெரிகின்றது.

நேற்று அமெரிக்காவுக்கு புறப்பட முன்னர் - நேற்று முன் தினம் இரவு - சில மாகாணசபை உறுப்பினர்களைச் சந்தித்த ஜனாதிபதி சிறிசேன, அடுத்த மாகாண சபை தேர்தல்களையும், நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலையும் தொகுதிவாரியாக நடத்துவதில் தாம் உறுதியாக இருக்கின்றார் என்று கூறியிருக்கின்றார்.

ஆக, இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எழுத்து மூலம் தான் அறிந்து கொண்ட பின்னரும் ஜனாதிபதி இவ்வாறு கூறுகின்றார் எனின், விரைவில் நடைபெற வேண்டிய மூன்று மாகாணசபைத் தேர்தல்களையும் தடுக்கக் கூடிய வகையில், இருபதாவது திருத்த ஏற்பாடுகளை ஏதோ ஒரு வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு அவரது அரசு விழைகின்றது என்றே கொள்ள வேண்டும்.

இப்படிக் குறுக்கு வழியில் தந்திரோபாயம் பண்ணி அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை அவரது அரசால் திரட்ட முடியுமா? தமிழ்க் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை இந்த நாடாளுமன்ற 'சுத்துமாத்துக்கு' ஆதரவு தருமா? இரு வாரங்களுக்குள் எல்லாம் வெட்டவெளிச்சமாகும்.

### ஐ.நாவின் தடைகளையும் மீறி

# வடகொரியாவில் இருந்து பொருள்கள் இறக்குமதி!

## இலங்கையில் விசாரணை

கொழும்பு, செப். 18

ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியாவிடம் இருந்து பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக, இலங்கை வெளிவிவகார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஐ.நாவின் தடைகளை மீறி, வடகொரியாவிடம் இருந்து கடந்த ஆறு மாதங்களில் இலங்கை உள்ளிட்ட 11 நாடுகள் இரும்பு, செம்பு, நிலக்கரி உள்ளிட்ட பொருள்களை இறக்குமதி செய்திருப்பதாக, ஐ.நாவின் ஏற்றுமதி கண்காணிப்புக் குழு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தது.

ஐ.நாவின் தடைகளை மீறியதாக இலங்கை மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், கொழும்பு நெருக்கடியில் சிக்கியுள்ளது.

இந்த நிலையிலேயே, வடகொரியாவிடம் இருந்து, இரும்பு, செம்பு போன்ற பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று இலங்கை வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடகொரியா மீது ஐ.நாவால் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு ஒன்றையும் இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளியிடவுள்ளது.

தடைகள் தொடர்பாக உள்ளூர் வர்த்தகர்கள் அறிந்து கொள்வதற்கு இந்த வர்த்தமானி அறிவிப்பு உதவியாக இருக்கும்என்று வெளிவிவகார அமைச்சின் சட்டப் பிரிவு அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையை வந்தடைந்தது ஆழ்கடல் கண்காணிப்பு கப்பல்!








கொழும்பு,செப். 18

இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக இந்திய அரசு வழங்கியுள்ள ஆழ்கடல் கண்காணிப்புக்கான கப்பல் நேற்று முன்தினம் அதிகாலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கடற்படை சம்பிரதாயங்களுக்கு அமைய கடற்படையினர் கப்பலை வரவேற்றனர்.

கடந்த 5ஆம் திகதி இலங்கை கடலோராப் பாதுகாப்புப் படைப் பிரிவின் பணிப்பாளர் ரியர் அட்மிரல் சமந்த விமல துங்க உத்தியோகபூர்வமாக கப்பலை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கப்பலின் கட்டளை அதிகாரியாக கப்டன் நெவில் உபேசிறி நியமிக்கப்பட்டுள்ளதுடன் 10 அதிகாரிகள் மற்றும் 98 சிப்பாய்கள் கப்பலில் கடமையாற்றுகின்றனர்.

இதற்கு CG60 என பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி மூவர் வைத்தியசாலையில் அனுமதி!

வவுனியாவில் நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் குளவி கொட்டிற்கு இலக்காகிய நிலையில் மூவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா ஓமந்தை ரயில் நிலையத்திலிருந்து 100மீற்றர் தூரத்திலுள்ள விளாத்திக்குளம் செல்லும் பிரதான வீதியிலுள்ள ஒதிய மரத்திலிருந்த குளவிக் கூடு மழை மற்றும் காற்றினால் கலைந்ததில் அவ்வீதியால் சென்ற சந்திர மோகன் மங்கையர்க்கரசி 32வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயார் மற்றும் பாடசாலை செல் லும் மாணவர்களான தமிழரசன் சுருதிகா (11வயது), காண்டீபன் சனோஜன் (11வயது) ஆகிய மூவரும் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (க 100)

### நாளை

19.09.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : பூரம் பி.இ. 12.09வரை
திதி :சதுர்த்தசி பி.ப. 12.12 வரை
சுபநேரம் : 10.33 – 12.03
இராகுகாலம் : 03.03 – 04.33

### 200 ஆவது நாளைக் கடந்து தொடர்கிறது

# கேப்பாபிலவு மக்களின் கவனவீர்ப்பு போராட்டம்!






முல்லைத்தீவு, செப். 18

கேப்பாபிலவு மக்களின் தொடர்நில மீட்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் 200 ஆவது நாளை எட்டியது.

எனினும், இதுவரை மக்களுக்கு எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதலாம்திகதி கேப்பாபிலவு இராணுவ முகாமிற்கு முன்பாக முன்னெடுத்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் ஆறு மாதங்களைக் கடந்துள்ளது.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மக்கள் இந்தத் தொடர்போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், இராணுவத்தினர் மற்றும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளைத் தாம் சந்திப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றனர் எனவும் மக்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை, தமது காணிகளுக்குள் கால் பதிக்கும் வரை தாம் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் மக்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, தம்மை நல்லாட்சி அரசு என அடையாளப்படுத்துபவர்கள் மக்களுடைய சொந்த நிலத்தை விடுவிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதமை வேதனை தருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (க)

## இந்தியப் பிரதமருக்கு ரணில் வாழ்த்து!



கொழும்பு, செப். 18

நேற்றைய தினம் தனது 66ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் மோடிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வருடங்களில் (மோடியுடன்) இணைந்து பணியாற்ற எதிர்பார்க்கிறார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## ஆலய வசந்த மண்டபத்துக்கு அடிக்கல்





தென்மராட்சி புத்தூர்ச்சந்தி சீமாவளவு ஞான வைரவர் ஆலய வசந்த மண்டப அடிக்கல் நடும் விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் அடிக்கல்லை நட்டு ஆரம்பித்து வைத்தார். வசந்த மண்டபம் அமைக்க தன்னால் இயன்ற உதவிகளைச்செய்து தருவார் எனவும் ஆலய நிர்வாகத்தினரிடம் அவர் தெரிவித்தார்.

(இ-21)

## காணிப் பிரச்சினை தொடர்பில் முல்லையில் ஆராயும் செயற்றிட்டம்!

முல்லைத்தீவு, செப். 18

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் காணிப்பிரச்சினை தொடர்பில் ஆராயும் செயற்றிட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அசமைப்பு கற்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் தெற்கில் இருந்து சட்டவாளர்கள் மற்றும் நில அளவையாளர்கள் சென்று இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

காணிப்பிரச்சினைகள் தொடர்பிலான ஆராய்வு குழுக்கூட்டம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு, சிலாவத்தை, கிச்சிராபுரம், முறிப்பு, நாகஞ்சோலை, நீராவிப்பிட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு கிச்சிராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால், வட்டுவாகல், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு முல்லைத்தீவு கோவில்குடியிருப்பு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கொக்குளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்தமக்களுக்கு கொக்குளாய் பொது நோக்கு மண்டபத்திலும் காணிப் பிரச்சினைகள் தொடர்பிலான ஆராய்வுக் குழுகூட்டம் இடம்பெற்றுள்ளது.

இந்தநிலையில், கோவில் குடியிருப்பில் 25 குடும்பங்களும், கொக்குளாயில் 25 குடும்பங்களும், கிச்சிராபுரத்தில் 65 குடும்பங்களும் முதல் கட்டமாக கலந்து கொண்டு அரச தனியார் காணிகள் தொடர்பில் நாட்டில் உள்ள சட்டங்கள் மற்றும் காணி பங்கீடுகள் தொடர்பில் எந்தெந்த காணிகளுக்கு எப்படி ஆட்சி செய்வது தொடர்பில் அறிந்து கொண்டுள்ளதுடன் மக்களின் காணிகள் தொடர்பிலான பிரச்சினைகளையும்முறையிட்டிருந்தனர்.

## எதிர்வரும் 3 நாள்களுக்கு கடல் கொந்தளிக்குமாம்!




கொழும்பு, செப். 18

இலங்கையை சூழவுள்ள கடற்பிரதேசம் அடுத்து வரும் மூன்று நாவு'களுக்கு அதிகம் கொந்தளிப்பாகக் காணப்படும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் வீசும் காற்றின் வேகம் மேலும் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றவர்கள் எச்சரிக்கையுடன் செயற்படுமாறு அவதான நிலையத்தால் வெளியிட்டப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றும் நாட்டின் தென்மேற்கு பகுதிகளிலும் வடமேல் மாகாணத்திலும் மழைவீழ்ச்சி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடையிடையே மழை பெய்யலாம் என்றும் காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

# குப்பைகளைப் புதைப்பதற்கு பாலமீன் மடு மக்கள் எதிர்ப்பு







மட்டக்களப்பு, செப். 18

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பாலமீன்மடு பகுதியில் மாநகரசபையினால் குப்பைகளை புதைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை அப்பகுதி மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து கைவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுகள் திருப்பெருந்துறையில் உள்ள திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கொட்டப் பட்டு வந்த நிலையில் அங்கு தீ பரவியதையடுத்து அங்கு கழிவுகள் கொட்டுவதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இதன்போது நீதிவான் நீதிமன்றிலும் அந்தப் பகுதி மக்களினால் வழக்குத் தொடரப்பட்டு எதிர்வரும் 28 ஆம் திகதி குறித்த திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் குப்பைகள் கொட்டுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த 17 நாட்களுக்கும் மேலாக மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகள் அகற்றப்படாத காரணத்தால் மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளிலும் வாவிக்கரையோரங்களிலும் குப்பைகளை பொதுமக்கள் வீசிச்செல்லும் நிலையேற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மட்டக்களப்பு மாநகரசபைப் பகுதியில் பெரும் சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதுடன் குப்பைகளையும் கழிவுகளையும் அகற்றுவதில் பெரும் நெருக்கடிகளை மட்டக்களப்பு மாநகர சபை எதிர்கொண்டு வருகின்றது.

மாற்று இடத்தில் குப்பைகளைக் கொண்டு கொட்டி முகாமை செய்வதற்கு மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வரும் நிலையில் சரியான இடம் கிடைக்காத காரணத்தனால் கழிவுகளை அகற்ற முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாலமீன் மடுபகுதியில் உள்ள அரசகாணியில் கழிவுகளைக் கொட்டி அதனை மூடிவிடும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் மட்டக்களப்பு மாநகர சபை மேற்கொள்ள எடுத்த நடவடிக்கைக்கு நேற்று அப்பகுதி மக்கள் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இனந்தெரியாத நபர்கள் அப்பகுதியில் தொடர்ச்சியாகக் குப்பைகளை வீசிச்செல்வதாகவும் இதனால் தாங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் சுகாதார சீர்கேடுகளுக்கு ஆளாகி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாநகரசபை அப்பகுதியில் குப்பைகளை புதைத்துவிட்டுச் சென்றால் ஏனைய பொதுமக்களும் அப்பகுதிக்கு குப்பைகளை கொண்டு வந்து கொட்டும் நிலையேற்படும் எனத் தெரிவித்த மக்கள் இயற்கை வனப்பு மிக்க இப்பகுதியை குப்பை மேடாக மாற்றுவதற்கு அனுமதிக்கமாட்டோம் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது மட்டக்களப்பு பொலிஸாரும் வருகைதந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக குப்பைகள் புதைக்கும் செயற்பாடுகளை மாநகரசபை இடைநிறுத்திக் கொண்டது.

மட்டக்களப்பு மாநகரசபைக் குட்பட்ட பகுதியில் குப்பைகள் அகற்றப்படாமை எதிர்காலத்தில் பெரும் சுகாதார பிரச்சினையைத் தோற்றுவிக்கும் சாத்தியமுள்ளதாக சுகாதார பிரிவினர் எச்சரித்துள்ளனர். (க)

## மட்டு. நகரில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு!

*மட்டக்களப்பு, செப். 18*

மட்டக்களப்பு நகரில் 'டெங்கை ஒழிப் போம் உயிர்காப்போம்' எனும் தொனிப்பொருளில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு கல்லடி விநாயகர் வித்தியாலயம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு நேற்று முன்தினம் கல்லடி மணிக்கூட்டு கோபுரம் முன்பாக நடைபெற்றது.

கல்லடி விநாயகர் வித்தியாலயத்தின் அதிபர் ஈ.தியாகலிங்கம் மற்றும் வித்தியாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து ஏற்பாடு செய்த டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்திற்கு கல்லடி விநாயகர் வித்தியாலய சுகாதாரக்கழகம் அனுசரணை வழங்கியிருந்தது.




## கல்மடுவில் வீடு எரிந்து நாசம்!

மட்டக்களப்பு, செப். 18

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்மடு மருத நகரில் வீடு ஒன்று முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனை, மருதநகர், நாக கன்னி ஆலய வீதியைச் சேர்ந்த நாளாந்த கூலித் தொழிலாளியான காளியப்பன் பாஸ்கரன் என்பவரது வீடே இவ்வாறு தீயில் கருகி நாசமாகி உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் யாரும் இல்லாத வேளையில் தீ பிடித்து வீடு எரிவதை அவதானித்த அயலவர்கள் தீயை அணைப்பதற்கு முயற்சித்தும் வீடு முற்றாக எரிந்ததுடன் வீட்டில் உள்ள அனைத்து உடைமைகளும் தீயில் கருகி அழிவடைந்து விட்டன என்றும் வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.



மேலும் பாடசாலை செல்லும் பிள்ளையின் பாடசாலை புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், புத்தக பைகள், உடைகள், வீட்டு உபகரணங்கள், தளவாடங்கள் மற்றும் ஒன்றரை வயதுடைய குழந்தையின் அனைத்து பராமரிப்பு பொருள்களும் தீயில் கருகிவிட்டன என்றும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மேற்குலகின் அடிவருடி அரசால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து!

## தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்



அதிகாரத்தில் இருக்கும் நல்லாட்சி அரசு மேற்குலக நாடுகளின் அடிவருடிகளாகச் செயற்பட்டு வருவதால் நம் நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என தினேஷ் குணவர்த்தன கவலை வெளியிட்டுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் நம் நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணையின் இணை அனுசரணையாளராக மாறிய போதே நாட்டுக்கு சனி பிடிக்கத் தொடங்கியது.

அதன் காரணமாகவே இன்று போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகள், வெளிநாட்டு நீதிபதிகள் போன்ற விடயங்கள் தலைதூக்கியுள்ளன.

மறுபுறத்தில் உள்நாட்டில் அதற்கான சாட்சியாளர்களைத் தயார்ப்படுத்தும் செயற்பாடுகளும் மிகவும் தந்திரோபாயமான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

இராணுவத் தளபதியாகவிருந்த ஜகத் ஜயசூரியவிற்கு எதிராகச சரத் பொன்சேகா சாட்சியம் அளிக்கத் தயாராக இருக்கின்றமை அவ்வாறான செயற்பாடுகளின்பிரதிபலிப்பே ஆகும்.

இந்த அரசு நாட்டைப் பற்றி சிந்திப்பதை விடுத்து மேற்கு நாடுகளைத் திருப்திப்படுத்துவதை மட்டுமே சிந்திக்கின்றது. அதன் காரணமாக எமது நாட்டின் இராணுவத்தினர் சர்வதேச விசாரணைகளுக்கு உட்படும் அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது.

ஆளுங்கட்சியின் மிக முக்கிய பொறுப்புகளை ஐ.தே.க. வசம் ஒப்படைத்துள்ளதால் ஜனாதிபதியை மீறி நாட்டுக்கு பாதகமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இல்லாவிட்டால் பௌத்த தேரர்களையும் இராணுவத்தினரையும் விமர்சித்த சரத் பொன்சேகா அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டிருப்பார்.

தற்போதைய நிலையில், அரசு அனைத்துத் துறைகளிலும் தோல்வியைத் தழுவியுள்ளது.

எனவே, கூட்டு எதிர்க்கட்சிக்குப் பிரகாசமான எதிர்காலம் உள்ளது. எதிர்வரும் தேர்தல்களில் அதனைத் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## அம்பாறையில் பொதிகளைத் தரையிறக்கின அமெரிக்க விமானப்படை விமானங்கள்!



கொழும்பு, செப். 18

13 பசுபிக் நாடுகளின் விமானப் படைகள் பங்கேற்ற Pacific Airlift Rally 2017 ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி நேற்றுமுன்தினம் நிறைவு பெற்றது.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடத்தின், பசுபிக் விமானப்படையால், இலங்கைக் கடற்படையுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி நீர்கொழும்பு விடுதி, கட்டுநாயக்க விமானப் படைத்தளம் ஆகியவற்றில் இடம்பெற்றன.

இதன் இறுதி நாள் நிகழ்வாக, அம்பாறை விமானப்படைத் தளம் அருகேவானில்இருந்து பொதிகளைத் தரையிறக்கும் ஒத்திகை நேற்று முன்தினம் காலை நிகழ்த்தப்பட்டது.

அமெரிக்க விமானப் படையின் C-130J விமானத்தில் இருந்து பொதிகள் தரையிறக்கப்பட்டமையை அடுத்து, கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தில் பயிற்சி பெற்ற படையினருக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதையடுத்து, கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் நடந்து வந்த, பசுபிக் விமான ஒன்றுகூடல் மற்றும் ஒத்திகைப் பயிற்சி முடிவுக்கு வந்தது.






(க)

## சீனாவுக்கான பயணத்தை ரத்துச் செய்தார் மஹிந்தர்!



கொழும்பு, செப். 18

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அடுத்தவாரம் சீனாவுக்கு மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த பயணத்தை திடீரென ரத்துச் செய்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் குவான்சோ நகரில் நடக்கும் கண்காட்சி ஒன்றில் பங்கேற்பதற்காக, எதிர்வரும் 21 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ சீனா செல்லவிருந்தார். அவர் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

குவான்டொங் மாகாண ஆளுர் மாஷிங்ரூயின் அழைப்பின் பேரிலேயே மஹிந்த ராஜபக்ஷவின் இந்தப் பயணம் இடம்பெறவிருந்தது.

அடுத்தமாதம் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடக்கும் பௌத்த மத நிகழ்வு ஒன்றில் பங்கேற்க மஹிந்த ராஜபக்ஷ, இந்தியா செல்லவிருந்தார். இந்திய மத்திய அரசின் பின்னணியுடனேயே இந்த நிகழ்வுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தப் பயணத்தின் போது, மஹிந்த ராஜபக்ஷவுடன், புதுடில்லி பேச்சுக்களை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில், சீன அரசு, குவான்டொங் ஆளுநர் மூலம், அழைப்பை அனுப்பியிருந்தது.

இதையடுத்து, இந்தியப் பயணத்துக்கு முன்னர், சீனப் பயணத்தை மேற்கொள்ள மஹிந்த ராஜபக்ஷ திட்டமிட்டிருந்தார். இது இந்தியாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையிலேயே, சீனப் பயணத்தை மஹிந்த ராஜபக்ஷ திடீரெனக் கைவிட்டுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரிவினையை ஏற்படுத்தியவர்கள் சிறுபான்மைச் சமூகத் தலைவர்களே!



கொழும்பு, செப். 18

கடந்த காலத்தில் சிறுபான்மை சமூக தலைவர்கள் தமிழர், முஸ்லிம் மற்றும் வடக்குத் தமிழர் என பிரித்து வைத்தனர் எனக் கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அமீர் அலி தெரிவித்துள்ளார்.

சிங்களத் தலைவர்களிடத்திலும், மதத் தலைவர்களிடத்திலும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைச் சரியான முறையில் கொண்டு செல்லாமையினாலே இன்று பிரிவினை வாதம் நாட்டில் நிலவுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மின் தடை அறிவிப்பு

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கள் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **மன்னார் பிரதேசத்தில்**-

தாராபுரம், துருக்கி நகர் ஆகிய பிரதேசங்களிலும்-

நாளை செவ்வாய் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ் பிரதேசத்தில்**-

கொல்லங்கலட்டி, வித்தகபுரம், மாவைகலட்டி, கீரிமலை, கூவில், நல்லிணக்கபுரம், கீரிமலை சந்தி கடற்படை முகாம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

## தினசரி ராசி பலன் 18.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் புரட்டாதித்திங்கள் 02 ஆம் நாள் திரயோதசித்திதி பகல் 01.08 மணி வரை. பின்னர் சதுர்தசி. நட்சத்திரம்- மகம் பி.இ 11.32 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம் பகல் 07.32 மணி முதல் 09.02 மணி வரை. சுபநேரம் பகல் 12.03 மணி முதல் 1.34 மணி வரை. புரட்டாதி மாத தேய்பிறை சதுர்த்தசி. திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத தேய்பிறை சதுர்த்தசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: மகம்**

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி நீடிக்கும். வியாபாரம் நன்கு முன்னேற்றமடையும். செய்யும் தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். நண்பர்கள் உறவினர்கள் ஒத்துழைப்பார்கள்.

**ரிஷபம்:** யோசனையான நாள் பணவரவு குறையும். குடும்பப் பிரச்சினை அதிகரிக்கும். எண்ணிய கருமம் தோல்வி அடையும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும்.

**மிதுனம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும் தேவையற்ற செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறைவடையும்.

**கடகம்:** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் நிறைவேறும்.

**சிம்மம்:** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும்.

**கன்னி:** அலைச்சல் மிகுந்த நாள். பணம்பற்றாக்குறையாக இருப்பதால், கடன் வாங்க அலைவார்கள். சிலரின் தேக ஆரோக்கியம் குன்றும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

**துலாம்:** மகிழ்ச்சியான நாள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி மேலோங்கும். நீண்ட காலம் பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்பு உண்டாகும்.

**விருச்சிகம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வேலை வாய்ப்புகள் குறையும்.

**தனுசு:** இன்பமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பம் குதூகலமாக இருக்கும். பயணத்தில் கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை உண்டாகும்.

**மகரம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். உறவினர்களால் தொல்லை அதிகரிக்கும். வியாபாரம் மந்த கதியில் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பல இடையூறு ஏற்படும்.

**கும்பம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். தொழிலில் நிறையப் பாடுபடவேண்டி வரும். அலைச்சல் மிகுந்த நாள்.

**மீனம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை மேம்படும். தொழிலில் மேன்மை உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: உத்தராடம் 2,3,4, திருகோணம், அவிட்டம் 1,2 ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# சீன வங்கி அதிகாரிகள் இலங்கைக்கு வருகை!

கொழும்பு, செப். 18

இலங்கைக்கு பெருமளவு கடன்களை வழங்கியுள்ள சீனாவின் ஏற்றுமதி- இறக்குமதி வங்கி (எக்சிம் வங்கி) யின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளது.

சீன எக்சிம் வங்கியின் சலுகைக்கடன் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் லி டான் உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெறவுள்ளனர்.

அடுத்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான மதிப்பீடுகளைச் செய்யவே இந்தக் குழு இலங்கைக்கு வரவுள்ளது.

சீனாவின் எக்சிம் வங்கி ஏற்கனவே இலங்கையில் பல்வேறு திட்டங்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது. குறிப்பாக, அம்பாந்தோட்டை துறைமுகம், நுரைச்சோலை அனல்மின் நிலையம், மத்தல விமான நிலையம் ஆகிய திட்டங்களுக்கு, சீன எக்சிம் வங்கியே கடன்களை வழங்கியது.

நெடுஞ்சாலைகள், நீர்ப்பாசனம், வடிகாலமைப்பு உள்ளிட்ட உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மேலும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக, சிறிலங்கா வரவுள்ள சீன எக்சிம் வங்கிக் குழுவுடன், இலங்கை அரசு பேச்சு நடத்தவுள்ளது.

# மன்னாரில் வறட்சி நிவாரணம்

மன்னார், செப். 18

மன்னார் மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக கால்நடை வளர்ப்போர், விவசாயிகள் என பல தரப்பட்டவர்கள் மிகவும் பாதிப்புடைந்திருந்தனர்.

இதனால், மன்னார் மாவட்டத்தில் பாதிப்படைந்தவர்களுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டிய அவசியத்தை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரிய சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு முன்மொழிந்திருந்தார்.

இந்த மாவட்டத்தில் சுமார் 32ஆயிரத்து 906 குடும்பங்கள் வறட்சியால் பாதிப்படைந்திருக்கின்றமையால் நிவாரணம் வழங்க சுமார் 116 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் வேண்டப்பட்டதாக தெரியவருகிறது.

இதையிட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினூடாக 25 ஆயிரத்து 92 குடும்பங்களுக்கு இந்த வறட்சி நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளைநடைமுறைப்படுத்தியுள்ளது.

இதற்கமைய மன்னார் நகர் பிரதேச செயலகப் பிரிவில் 8,796 குடும்பங்களுக்கும், மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 4,699 குடும்பங்களுக்கும், நானாட்டான் பிரதேச செயலப் பிரிவில் 4,676 குடும்பங்களுக்கும், மடு பிரதேச செயலகப் பிரிவில் 3,158 குடும்பங்களுக்கும் முசலி பிரதேச செயலகப் பிரிவில் 3,763 குடும்பங்களுக்கும் தற்பொழுது இந்த வறட்சி நிவாரண உணவுப் பொருள்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இதற்காக 5 கோடியே 80 லட்சம் ரூபா கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-112)



யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் உள்ள அருள் மாதா சனசமூக நிலைய முன்றிலிலும் அதனை அண்டிய பகுதியில் வீதி ஓரமாகவும் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இதனால் குடிமனைகள் நிரம்பிய அந்தப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது எனவும் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகின்றது எனவும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

வீதிகளில் காணப்படும் குப்பைகள் நாய்களாலும் மற்றும் காற்றாலும் எங்கும் பரவுகிறது என்றும் அதிகளவில் பொலித்தீன் குப்பைகளே தேங்கி காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குப்பைகளை அகற்றி பிரதேச மக்களைச் சுகாதாரச் சீர்கேட்டில் இருந்து காப்பாற்றுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-21)

## அத்தியர் இந்துவின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த விழாவில் வடமாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் பிரதம அதிதியாகவும் யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா பழைய மாணவர் சங்க அனுசரணையாளர் பொ.சிவசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். நிறுவுநர் நினைவுப் பேருரையை ஓய்வு நிலை அதிபரும் பழைய மாணவருமான வே.கா.கணபதிப்பிள்ளை ஆற்றவுள்ளார். (இ)

## யாழ்.கல்வி வலய விளையாட்டு விழா கொக்குவில் மைதானத்தில்

யாழ்ப்பாணம் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பக் கல்வி மாணவர்கள் இடையே நடத்தப்படும் இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்களைப் பொறுப்பாசிரியருடன் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



# இனப் பிரச்சினைக்கு தீர்வு: தமிழர் தரப்பின் அடுத்த நகர்வு என்ன?

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் என்பது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தமாகச் சித்திரிக்கப்பட்டு சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவி இலங்கை அரசு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் ஆயுதப்போராட்டத்தை மௌனிக்கச் செய்தது. ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப்பட்டு 8 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூடத் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய ஓர் அரசியல் தீர்வை எட்டமுடியாமல் இருப்பது இந்த நாட்டின் துரதிஷ்டமே.

போர் வெற்றிவாதத்தில் மிதந்த மஹிந்த ராஜபக்ஷவால் சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையே ஆட்சி மாற்றத்திற்குப் பிரதான காரணமாகவும் இருந்தது. 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஐ.நா. மனிதவுரிமை பேரவை புதிதாக உருவாக்கப்பட்ட மைத்திரி-ரணில் அரசுக்கு நெருக்கடிகளைக் குறைத்து யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச தரத்துக்கு ஏற்ப விசாரணை நடத்துவதற்குக் கால அவகாசமும் வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியிருக்கின்றது. இதில் நிலைமாறுகால நீதிக்கான பொறிமுறையாக உண்மையைக்கண்டறிதல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குதல், பொறுப்புக் கூறல், மீள் நிகழாமையை உறுதிப்படுத்தல் என்னும் நான்கு விடயங்கள் கொண்டுவரப்பட்டன.

மாதங்கள் பல கடந்தும் இந்த நான்கையும் இலங்கை அரசு இதய சுத்தியுடன் முன்னெடுக்கவில்லை என்று தற்போது சர்வதேச சமூகமும், ஐ.நாவும் தமது கவலைகளை வெளியிட்டுள்ளன.

இலங்கை அரசு விரும்பியோ, விரும்பாமலோ ஓர் அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டிய இக்கட்டான சூழலில் இருக்கிறது. இருப்பினும், இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை முன்வைத்தால் அது தமது வாக்கு வங்கியைப் பாதிக்கும் என்று சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு பிரதான கட்சிகளும் அஞ்சுகின்றன. சர்வதேச சமூகத்தின் நெருக்கடிகளில் இருந்து தப்புவதற்கும், தீர்வை வழங்காமல் காலத்தை நீடிப்பதற்கும் ஆட்சியாளர்கள் பல்வேறு யுக்திகளைக் கையாள்கின்றனர் என நாட்டின் சகல தரப்பைச்சேர்ந்த புத்திஜீவிகளும், சமூக ஆர்வலர்களும் சுட்டிக் காட்டுகின்றனர்.

பாதுகாப்புத் தரப்பினருக்கு இடையில் இருக்கக் கூடிய முரண்பாடுகள் பொதுவாகப் பகிரங்கப்படுத்தப் படுபவை அல்ல. ஆனால், இலங்கையில் அரசியல் கட்சிகளைப் போன்று பாதுகாப்புத் தரப்பினர் பொது அரங்கில் விவாதம் நடத்துகின்றனர்.

இவர்களுடைய விவாதங்களில் இருந்து தமிழ் மக்களுக்கு ஏதோவொரு வகையில் அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அந்த அநீதிக்கான நீதியையே தமிழ் மக்கள் கோருகின்றனர் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒட்டுமொத்தத்தில் பாதுகாப்புத் தரப்பினரிடமும் ஒரு உண்மையான தேசப்பற்றைப் பார்க்க முடியவில்லை.

ஐ.நா. தீர்மானத்துக்கு அமைவாக



மீள் நிகழாமையை உறுதிப்படுத்தும் பொருட்டு புதிய அரசமைப்பின் ஊடாகத் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று மைத்திரி - ரணில் கூட்டரசு சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்திருந்தது.

அதனை உருவாக்குவதற்காக ஒரு வழிநடத்தல் குழுவையும் அமைத்து, அதற்கு உதவி செய்வதற்காக ஆறு உபகுழுக்களையும்நியமித்தும்இருந்தது.

உபகுழுக்களின் அறிக்கை கடந்த வருடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வழிநடத்தல் குழுவின் அறிக்கையும் கடந்த ஆண்டு டிசெம்பருக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இருப்பினும் அந்த அறிக்கை இன்றுவரை சமர்ப்பிக்கப்படாமல் இழுபறியில் உள்ளது. இந்த மாதத்தின் இறுதிப் பகுதியில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் கையளிக்கப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை ஒரு யோசனைத் திட்டத்தைக் கையளித்திருந்தது. தற்போது அந்த அரசமைப்பில் தமிழ் மக்களது நியாயபூர்வமான அபிலாஷைகள் உள்வாங்கப்படாத நிலையில் அந்த அரசமைப்பை எதிர்கொள்வது தொடர்பில் அரசியல் விழிப்புணர்வையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் புதிய அரசமைப்பு மற்றும் தீர்வுத் திட்டம் தொடர்பில் எத்தகைய நிலைப்பாடு எடுத்திருக்கின்றது என்பது தொடர்பாக ஒரு தெளிவற்ற நிலையில் இருக்கின்றது.

அவ்வப்போது கூட்டமைப்பின் தலைவரும், தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் வடக்கு - கிழக்கு இணைப்பு தற்போது சாத்தியம் இல்லை என்றும், பௌத்தர்கள் பெரும்பான்மையாக இருக்கின்றமையால் பௌத்தத்திற்கு முன்னுரிமை அளிப்பதில் தவறில்லை எனவும், சமஷ்டியாட்சியா அல்லது ஒற்றையாட்சியா என்ற சொற்பதங்களில் தங்கியிருக்காமல் கிடைக்கின்ற அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதே தற்போது சிறந்தவழி என்றும்

## கருத்திற்கொள்ளாத சிங்களத் தலைமைகள்

மேடைகளிலும், ஊடகங்கள் வாயிலாகவும் தெரிவித்து வருகின்றனர்.

தமது வாக்குப்பலத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் இந்தக் கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தப் பின்னணியிலேயே தமிழ் மக்கள் பேரவையினுடைய புதிய அரசமைப்பை எதிர்கொள்வது எப்படி என்ற பொதுக்கூட்டமும் நடைபெற்றுள்ளது. தமிழ் தேசிய இனம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கில் ஒரு பிரகடனமும் அதில் செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பு என்பதும், சமஷ்டி முறையிலான அரசில் தீர்வே தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்றும், இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பிரகடனம் வெளிவந்த பின்னர் வழிகாட்டல் குழுவில் கூட்டமைப்பின் சார்பாக அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கையொப்பமிட்டு ஓர் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையின் முன்மொழிவில், இணைந்த வடக்கு- கிழக்கில் சமஷ்டித் தீர்வு அவசியமாகும் என்றும், செனற்சபை அமைக்கப்படவேண்டும் என்றும், வழிநடத்தல் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் உள்ளது. பேரவையின் தீர்மானமும் அது மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியிருப்பதாலும் கூட்டமைப்பின் தலைமை இந்த முடிவை எடுக்கத் தூண்டியிருக்கின்றது.

இயல்பாகவே மக்கள் சார்பாக முடிவெடுக்க வேண்டிய தலைமைகள் இன்று தடுமாறிவருகின்றமையையும், அதனை வழிநடத்த ஓர் அமைப்பு அவசியம் என்பதையும் இந்தச்சம்பவம் வெளிப்படுத்தியும் இருக்கின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரையில் சமஷ்டி என்பதை ஒரு பிரிவினையாகவே பார்க்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும் ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு என்று சொல்கின்றது.

நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய கூட்டமைப்பின் தலைவர், வழிநடத்தல் குழுவுக்கு சமஷ்டி என்பதன் பொருளைத் தெளிவாகப் புரியவைக்கவில்லையா? அல்லது புரிந்துகொண்டவர்கள் தமிழ்த் தேசிய இனத்திற்கு எத்தகைய தீர்வையும் வழங்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து இதனை எதிர்க்கின்றனரா என்பது புரியாத புதிராகவே உள்ளது.

ஆட்சிமாற்றம்ஏற்பட்டவுடன்இரண்டு கட்சியின்தலைவர்களும்தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினையைத் தீர்க்காமல் நாட்டை முன்நோக்கி நகர்த்த முடியாது என்று கூறி இருந்தனர்.

அவர்களது இன்றைய நிலையைப் பார்க்கின்றபோது நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு இதய சுத்தியுடன் தீர்வைக் காண விரும்பவில்லை என்ற சந்தேகமே எழுகிறது.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த படைத் தரப்பு தொடக்கம் அரசியல்வாதிகள் வரை எவருக்கும் இந்த நாட்டின் இனப்பிரச்சினையை தீர்த்து அனைவரும் சகோதரத்துவத்துடனும், ஆத்ம திருப்தியுடனும் கைகோர்த்து நடப்பதை விரும்பவில்லை என்றே தெரிகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் முடியாது. இதனை நாட்டின் சகல தரப்பினரும் உணர்ந்துகொண்டு, முழு மனத்துடனும், இதய சுத்தியுடனும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, காலம் காலமாக பாதிக்கப்பட்ட இனம் நிம்மதி பெருமூச்சு விடும் வகையிலும், நம்பிக்கையளிக்கும் வகையிலும் நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பது இன்றைய காலத்தின் கட்டாயம். இதன் மூலமே எதிர்கால இலங்கையைச்சகோதரத்துவத்துடனும், சமத்துவத்துடனும் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக முன்னோக்கி நகர்த்த முடியும். (நன்றி: இணையம்) ★

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




மோடியின் கீழ் சீனாவுக்கு எதிராக வொஷிங்டனின் இராணுவ-மூலோபாயத் தாக்குதலில் இந்தியா ஒரு முன்னணி நாடாக எழுச்சி கண்டிருந்த நிலையில், பெய்ஜிங் நிலைப்பாடு குறிப்பிடக்கூடிய விதத்தில் மாறியுள்ளது.

நீண்டகாலமாக பெய்ஜிங் கட்டுப்




பாட்டில் உள்ளதும் ஆனால், பூட்டானால் உரிமைகோரப்படும் தொலைதூர இமாலய மலை உச்சியிலிருந்து இந்தியா அதன் துருப்புகளை திரும்பப் பெறவில்லை என்றால் ஓர் எல்லைப் போரைக் கொண்டு கடந்த இரண்டு மாதங்களாக சீன அரசாங்க அதிகாரிகளும் மற்றும் அதன் அரசு ஊடகங்களும் அதை மீண்டும் மீண்டும் அச்சுறுத்தியுள்ளன.

சீனாவுக்கு எதிராக தனது போர் முனைவுக்குள் இந்தியாவை அணிதிரட்டும் அமெரிக்க முனைவானது தெற்காசியாவை வல்லரசு மோதலின் சுழலுக்குள் இழுத்துள்ளது மற்றும் அப்பிராந்தியத்தை ஒருபுறம் இந்தியா-அமெரிக்கா மறுபுறம் சீனா-பாகிஸ்தான் என்று துருவமுனைப்




படுத்தி வருகிறது என்பதை அடிக்கோடிடும் வகையில், ட்ரம்பின் ஆப்கன் போர் உரையை அடுத்து பெய்ஜிங் இஸ்லாமாபாத்திற்கு ஒரு பலமான ஆதரவைக் காட்டியுள்ளது.

முதலில் சீன வெளியுறவுத்துறை அமைச்சக பிரதிநிதி ஒருவர் பயங்கரவாதத்திற்கு எதிரான சண்டையில் அந்நாடு ‘‘மிகப்பெரும் தியாகங்களை’’ செய்துள்ளதாக மற்றும் ‘‘முக்கிய பங்களிப்புகளை’’ வழங்கியுள்ளதாக கூறி, பாக்கிஸ்தானின் பாதுகாப்பிற்கு வந்தார். பின்னர் முன்பே திட்டமிடப்பட்டிருந்த ஒரு விஜயமாக ஏற்கனவே பாக்கிஸ்தானில் இருந்த சீன வெளியுறவுத்துறை அமைச்சர், பாகிஸ்தானிய தலைமையுடனான கூட்டங்களில் உயர்மட்ட இராணுவ-பாதுகாப்பு மற்றும் பொருளாதார கூட்டுறவின் உத்வேகத்தைப் பேணுவதற்குஒப்புக் கொண்டார்.

உருவெடுத்து வரும் உலகளாவிய மற்றும் பிராந்திய நிலைமைகளில் பெய்ஜிங்கும் இஸ்லாமாபாத்தும் கொள்கை ஒருங்கிணைப்பை அதிகரிப்பதும் மற்றும் 50 பில்லியன் டொலர் சீன பாகிஸ்தான் பொருளாதார பாதையின் அபிவிருத்தியை முன்நோக்கிக் கொண்டுசெல்வதும் இதில் உள்ளடங்கும்.

ஆப்கன் போரைத் தீவிரப்படுத்தும் மற்றும் பாகிஸ்தானை மிரட்டும் வொஷிங்டன் திட்டங்களுக்கு ரஷ்யாவும் அதன் எதிர்ப்பைத் தெளிவுபடுத்திஉள்ளது.ஆப்கானிஸ்தானுக்கான ரஷ்ய ஜனாதிபதி தூதர் Zamir Kabulov கூறுகையில், (பாகிஸ்தான்) மீது அழுத்தமளிப்பது தீவிரமாக அப்பிராந்தியம் எங்கிலும் பாதுகாப்பு நிலைமையை ஸ்திரமின்மைக்கு உட்படுத்தி, ஆப்கானிஸ்தானுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். - என்றார்.

பாரம்பரிய ரீதியில் இந்தியாவுடன் ரஷ்யா மிக நெருக்கமான உறவுகளை அனுபவித்துள்ளது என்றாலும், வொஷிங்டன் உடனான புதுடில்லியின் அணிசேர்க்கை இந்தோ-ரஷ்ய மூலோபாய பங்காண்மையை கடும் நெருக்கடியில் நிறுத்தி வருகிறது.

**பேச்சு சுதந்திரம் மீதான ஒரு சில்லிடவைக்கும் தாக்குதல்**

பேச்சு சுதந்திரம் மீதான ஒரு சில்லிட வைக்கும் தாக்குதலாக, ஜனவரி மாதம் ட்ரம்ப் பதவியேற்புக்கு எதிரான போராட்டங்களை ஒழுங்கமைத்த disruptj20.org வலைத்தளம் சம்




பந்தமான பெரிய தரவுகளை ட்ரம்ப் நிர்வாகத்திடம் ஒப்படைக்குமாறு வலைத் தள இணைய சேவை வழங்கும் நிறுவனமான ட்ரீம்ஹோஸ்ட் நிறுவனத்திற்கு கொலம்பியா மாவட்ட உச்ச நீதிமன்ற நீதிபதி அண்மையில் உத்தரவிட்டார்.

அத்தளத்தை பார்வையிட்ட நபர்களை அடையாளம் காண பயன்படுத்துவதற்காக, disruptj20.org தளத்தைப் பார்வையிட்ட 1.3 மில்லியன் பேரின் விவரங்கள் மற்றும் ஐபி முகவரிகள் உட்பட அந்நிறுவனம் வைத்திருக்கும் எல்லாத் தரவுகளையும் தரக் கோரி ஜூலையில் பிறப்பிக்கப்பட்ட ஓர் உத்தரவாணையை ட்ரீம்ஹோஸ்ட் நிறுவனம் ஓகஸ்ட் 14 இல் அம்பலப்படுத்திய போதுதான்,அரசாங்கத்தின் கோரிக்கை முதன்முதலில் வெளியில் தெரியவந்தது. அத்தளத்தை உருவாக்குவதில் மற்றும் அதில் பங்களிப்பதில்சம்பந்தப்பட்டவர்களின்மின்னஞ்சல்கள், புகைப்படங்கள் மற்றும் இதர தரவுகள் மீதான அணுகுதலையும் அந்த உத்தரவாணை கோரி இருந்தது.

**1.5 மில்லியனுக்கும் அதிகமான வலைத் தள இணைய சேவை வழங்கல்களை ஒழுங்கமைத்து கொடுத்துள்ள ஒரு தனியார் நிறுவனமான ட்ரீம்ஹோஸ்ட், உத்தரவாணைக்கு கீழ்படிய உடன்பட்டுள்ளதுடன், நீதிபதியின் முடிவு ’’தனிநபர் அந்தரங்க விடயங்கள் மீதான வெற்றி’’ என்று கூறி, தரவுகளை வழங்கத் தொடங்கியுள்ளது.**

நீதித்துறை உத்தரவாணையை அந்நிறுவனம் பகிரங்கமாக அம்பலப்படுத்தியதை தொடர்ந்து, அரசு அதன் கோரிக்கையை தெளிவுபடுத்தியது. அதற்கு ஐ.பி. முகவரிகள் தேவையில்லை என்றும், ஆனால் பயனர் கணக்கு சம்பந்தமாக ட்ரீம்ஹோஸ்ட் சேமித்து வைத்துள்ள சகல கோப்புகள், தரவுகள் மற்றும் தரவு விவரங்கள் உட்பட பயனர் கணக்கு சம்பந்தமான எல்லா விவரங்களை அல்லது பிற தகவல்களை இப்போதும் கோருவதாக அது குறிப்பிட்டது.

கிளிண்டனால் நியமிக்கப்பட்டவரான அந்த நீதிபதி, ரோபர்ட் மொரின், தரவுகளை அலசும் அரசின் அணுகுமுறைகளை நீதிமன்றம் மேற்பார்வையிடும் என்ற வெற்று அவசியத்தைக் காரணங்காட்டி உத்தரவாணை பிறப்பித்திருந்தார்.

1.5 மில்லியனுக்கும் அதிகமான வலைத்தள இணைய சேவை வழங்கல்களை ஒழுங்கமைத்து கொடுத்துள்ள ஒரு தனியார் நிறுவனமான ட்ரீம்ஹோஸ்ட், உத்தரவாணைக்கு கீழ்படிய உடன்பட்டுள்ளதுடன், நீதி பதியின் முடிவு ‘‘தனிநபர் அந்தரங்க விடயங்கள் மீதான வெற்றி’’ என்று கூறி, தரவுகளை வழங்கத் தொடங்கியுள்ளது. இது நேர்மையில்லை. அந்நிறுவனத்தின் வழக்கறிஞர் Raymond Aghaian அவரே நீதிமன்றத்தில் குறிப்பிடுகையில், அரசாங்கம் கோரு கின்ற மற்றும் இப்போது பெறவிருக் கின்ற தகவல்கள் ‘‘ஓர் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்களின் பட்டியலை அப்படியே பெறுவதற்கு ஒப்பா னதாகும்.-என்றார்.




(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

99



**அத்தியாயம் - VI**

## விடுதலைப் புலிகளின் அரசியற் கட்சி

விடுதலைப் புலிகளின் இறுதி நோக்கம் பற்றி பிரேமதாசா சந்தேகம் கொள்ளத் தொடங்கியிருக்கின்றார் என்று, தனிப்பட்ட சந்திப்புகளின்போது ஹமீது பாலாவிடம் கூறினார். அரசியல் யாப்புக் கட்டமைப்புக்குள் ஒரு தீர்வைப் புலிகள் நாடமாட்டார்கள் என்றும், தனித் தமிழ் அரசை நிறுவுவதில் உறுதியாக இருக்கின்றார்கள் என்றும் சில அமைச்சர்கள் அரசுத் தலைவரை எச்சரிக்கின்றனர் என்று ஹமீது தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் புலிகள் பங்குபற்றி வெற்றி பெறுவார்களானால், உள்நாட்டிலும் அனைத்துலகிலும் புலிகளின் மதிப்பு உயரும் என்று ஹமீது எமக்கு அறிவுரை கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைமை இதற்கு இணங்கினால் அல்லாமல் பெருமாள் நிர்வாகத்தைக் கலைத்து புலிகளிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது அரசுத் தலைவருக்கு மிகக் கடினமாக இருக்கும். அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கும் புலிகளின் தலைமை சம்மதமாக இருக்கின்றது என ஹமீதுவிடம் பாலா கூறினார். தமிழ் மக்களின் உண்மையான ஏகப் பிரதிநிதிகள் தாமே என்று பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் அனைத்துலகத்திற்கும் நிரூபிப்பதன் பொருட்டு, மாகாணசபைத் தேர்தலில் பங்கெடுக்கப் புலிகள் சம்மதமாக இருந்தார்கள். அதேசமயம், பிரேமதாசாவின் இறுதி நோக்கம் என்ன என்பது பற்றி புலிகளும் சந்தேகம் கொண்டிருக்கின்றார்கள் என்று பாலா அங்கு தெரிவித்தார். அதேசமயம், வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைத்து விடுவாரா, அரசியல் யாப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கி, ஆயுதப் படைகளை பாசறைகளில் முடங்கியிருக்கச் செய்வாரா, அமைதியான முறையில் அதிகாரம் புலிகளின் கரங்களுக்கு மாற அவர் இடமளிப்பாரா என்ற பாலாவின் வினாக்களுக்கு ஹமீது வழங்கிய பதில்கள் சாதகமாகவே அமைந்தன.

நாம் மக்களாட்சி அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொள்ள ஆயத்தமென்றால், பிரேமதாசாவை இணங்கச்செய்ய முடியுமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்குவது தொடர்பாக முல்லைத் தீவில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைமைப் பணிமனைக்கு நாம் சென்றபோது, பிரபாகரனிடமும் ஏனைய தலைவர்களிடமும் பாலா அனுமதி கோரியிருந்தார். எமது தொலைத் தொடர்பு சாதனம் மூலம் பிரபாகரனுடன் பேசி, கட்சிக்கான பெயருக்கும், கட்சிப் பதவியாளர் பெயர்களுக்கும் பாலா நேரடி அங்கீகாரம் பெற்றார். கட்சிக்கான யாப்பு ஒன்றை வரையும் பணியே மீதமிருந்தது. அரசியல் கட்சி யாப்புக்கள் பற்றித் தாம் முன்னர் ஆய்வு செய்தவற்றை அடிப்படையாக வைத்து, பத்திரத்தை பாலா வரைந்தார். அதைச் செப்பனிட்டு, தட்டச்சில் இட நான் உதவினேன். அரசியல் கட்சிக்கு, 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்று பெயர் சூட்டப்பட்டது. விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மகேந்திரராசா (மாத்தையா) கட்சியின் தலைவராகவும், யோகரட்ணம் யோகி செயலதிபராகவும் நியமிக்கப்பட்டனர். உண்மையான மக்களாட்சிக் கட்சிக்கான அடித்தளம் ஒன்றுக்கு யாப்பு இடமளித்தது. மக்களின் பல்வேறு பிரிவினரும் அதில் பிரதிநிதித்துவம் பெற்று பங்கெடுக்கவும் வகைசெய்தது. யாப்பின் பிரதியொன்று, பதிவுக்காகத் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் கட்சியைப் பதிவு செய்துவிட்டு, அரசுத் தலைவருடன் ஆலோசித்த பின்னர் தயக்கத்தோடு புலிகளின் இலட்சினையை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சின்னமாக அங்கீகரித்தார்.

விடுதலைப் புலிகள் புதிய அரசியல் கட்சி ஒன்றை நிறுவி, அரசியல் பிரதான நீரோட்டத்தில் கலந்துகொள்ளத் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்தமை பிரேமதாசாவுக்கு பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. நாடு முழுவதும் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை விவாதிப்பதற்காகத் தாம் கூட்ட உத்தேசித்திருக்கும் அனைத்துக் கட்சி மாநாட்டில் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவேண்டும் என்று அவர் பெரிதும் கேட்டுக்கொண்டார்.

பதிவுசெய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சியாக, பகிரங்க அரசியல் அரங்கு ஒன்றுக்கு விடுதலைப் புலிகளைக் கொண்டு வரும்போது, அமைதிப் பேச்சுக்கள் முக்கிய அரசியல் அறுவடையாக இதைக் காட்டக்கூடுமாக இருக்கும் என்பதே அவருடைய எண்ணமாக இருந்தது. மாநாட்டு அங்குரார்ப்பண வைபவத்தில் 'பார்வையாளராக' கலந்துகொள்ள புலிகளின் பிரதிநிதிகள் சம்மதித்தார்கள். அனைத்துக் கட்சி மாநாடு ஒகஸ்ட் 12 இல் கூடியபோது 26 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாக ஏறத்தாழ 100 பேர் கலந்துகொண்டார்கள்.

பிரேமதாசாவின் அங்குரார்ப்பண உரை, பிரச்சினைத் தீர்வை இலக்காகக் கொண்டு அமைந்தது. கலந்தாலோசனை, சமரசம், கருத்தொற்றுமை ஆகிய தமது மூன்று அணுகுமுறைகளையும் அவர் முன்வைத்தார். முக்கிய விடயமான இனநெருக்கடி தவிர்ந்த அனைத்துப் பிரச்சினைகளையும் மாநாடு விவாதித்தது. கலந்தாலோசனையோ சமரசமோ கருத்தொற்றுமையோ ஏற்படாதமையால் மாநாடு விரைவிலேயே பிசுபிசுத்துப் போயிற்று. ராஜீவ் நிர்வாகத்துக்கும் பிரேமதாசாவுக்கும் இடையே இடம்பெற்ற கூட்டு உடன்பாட்டின் உறுதியளித்தபடி 1989 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத முற்பாகத்தில் இந்திய அமைதிப் படைகள் திருப்பி அனுப்பப்படும் பணி தொடங்கியது. மெதுவாகவே அது செயற்பட்டது. படிப்படியாகவும் மாவட்டம் மாவட்டமாகவும் இந்தியப் படைகள் வெளியேற, தமிழ்த் தேசிய இராணுவத்தினர் அந்தப் பாசறைகளில் குடிகொண்டு தங்கள் நிலைகளைப் பலப்படுத்தினர். முதலில் கிழக்கு மாகாண அம்பாறையிலும், மட்டக்களப்பிலும் இருந்து இந்தியப் படைகள் வெளியேறின. கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய இராணுவத்தின் நிலைகள் மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதில் சாத்தியம் என்பதால், திகிலடைந்து குழம்பிப்போன பெருமாள் நிர்வாகம் பெரும்படை திரட்டும் முயற்சியில் மூர்க்கத்தனமாக ஈடுபட்டது. வீதிகளில், வீடுகளில், பள்ளிகளில் நுழைந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியினர், திடகாத்திர உடலுடைய இளவயது ஆண்கள் அனைவரையும் பலவந்தமாகப் பிடித்துச்சென்றனர். தமது இராணுவப் பிரிவுக்கு ஆளணி மூலம் ஊட்டம் வழங்கி, ஈடாட்டம் கண்டு நொருங்கும் நிலையில் இருந்த தமது ஆட்சியைத் தக்க வைப்பதே இந்த ஆட்சேர்ப்பின் நோக்கமாக இருந்தது. தான் அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்ற பகீரதப் பிரயத்தன முயற்சியில் பயிற்சியோ, போர் அனுபவமோ இல்லாத பெருந்தொகையினரை பலிகொடுக்க ஈ.பி.ஆர்.எல்.எவ். செய்த இந்த ஆட்சேர்ப்பு முயற்சி, தமிழ் மக்களிடையே பெருமாள் மட்டில் மனக்கொதிப்பை ஏற்படுத்தியது.

விடுதலைப் புலிகளின் தலைமை ஓர் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியது. அநாவசியமாக இரத்தம் சொரியப்படுவதைத் தவிர்க்க விரும்பிய பிரபாகரன், சிறிலங்கா அரசுத் தலைவருக்கு பாலா மூலம் ஓர் அவசர செய்தி அனுப்பினார். புலிகளுக்கும் ரி.என்.ஏக்கும் இடையே நடைபெறும் போரில் சிங்கள ஆயுதப் படைகள் கலந்துகொள்ளக்கூடா என்று கேட்டுக்கொண்டார்.

தமிழ்த் தேசிய இராணுவத்தின் ஆயுதம் தரித்த அணியினர் சரணடைவார்களாயின், அவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் அறிவித்தார். 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாத முற்பகுதியில் விடுதலைப் புலிப் படையணிகள் கிழக்கு மாகாணத்தில் தாக்குதலை நடத்தினார்கள். முதலில் அம்பாறையிலும் அடுத்த சில வாரங்களில் மட்டக்களப்பிலும் தமிழ்த் தேசிய இராணுவத் தளங்களை இலகுவாகத் தம்வசப்படுத்தினார்கள். தமிழ்த் தேசிய இராணுவத்துக்குத் திரட்டப்பட்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் ஆயுதம் தரித்த உறுப்பினர்களே எதிர்த்து நின்றார்கள். சரணடைந்த அனைவரும் கிழக்கு மாவட்டங்களில் உள்ள பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். சரணடைந்த பலர் புலிகள் அணியில் சேர்ந்தார்கள்.

கிழக்கிலே மாகாண நிர்வாகம் வீழ்ச்சியடைய ஆற்றா நிலையில் தவித்த பெருமாள், ராஜீவ் காந்தியிடமும் பிரேமதாசாவிடமும் மனுக்கள் விடுத்தார். இந்திய இராணுவம் விட்டுச்செல்லும் மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் நிர்வாகத்தைத் தமதாக்கிக் கொள்ளும் முயற்சியைத் தலையிட்டுத் தடுக்க வேண்டும் என்றே பெருமாள் மனு செய்தார். காந்தியைப் பொறுத்தவரையில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு அவர் ஏற்பாடு செய்யும் நிலையில் இருந்தமையாலும், போபஸ் விவகார ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு அவர் முகம்கொடுக்க வேண்டியிருந்தமையாலும் பெருமாளின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்க அவர் விரும்பவில்லை. நிலைமையைப் பிரேமதாசா புரிந்திருந்தார். ஆகையால், இந்தியப் படை வெளியேற்றம் தாமதம் அடைவதை ஒட்டியே அவருடைய கவலை இருந்தது. உடைந்து நொருங்கிக்கொண்டிருக்கும் பெருமாளின் இராணுவக் கட்டமைப்பை அவர் மீளத் திரட்டி, ஒழுங்கு செய்து, உறுதிப்படுத்த அவருக்கு அவகாசம் அளிக்கும் நோக்கத்தோடு, புதுடில்லி இந்தியப் படைகளைத் திருப்பி அழைப்பதைத் திட்டமிட்டே தாமதப்படுத்துகிறதோ என்று பிரேமதாசா சந்தேகப்பட்டார்.

(தொடரும்...)





முல்லைத்தீவு உடையார் கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஸ்மாட் வகுப் பறைக் கட்டடத்தை, வட மாகாண மகளிர் விவ கார அமைச்சர் அனந்தி சசிதரன் திறந்து வைத் தார்.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில், முதன்மை விருந்தினராக அமைச்சர் அனந்தி சசிதரனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வியியற் கல்லூரியின் முதன்மை விரிவு ரையாளர் வேலாயுதம் நந்தகுமார், உடையார் கட்டு கோட்டக்கல்வி அதிகாரி சி.சுப்பிரமணி யம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ச-81)




வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீப னின் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுகீட்டின் கீழ் பருத்தித்துறை பிரதேசசபைக்குட்பட்ட திக்கம் அறிவகம் சனசமூக நிலையம் மற்றும் புலோலி குரும்பகட்டி முன்பள்ளி ஆகிய வற்றுக்கான உதவிகளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள். (ச)





சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மருத்துவமுகாம் ஒன்று கல்லூரி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் லயன் மு.செல்வஸ்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் , கல்லூரியின் பழைய மாணவரும் சத்திரசிகிச்சை நிபுணருமான வைத்தியகலாநிதி பு.ஆதவன் உரையாற்றுகின்றமையையும் சிறுமி ஒருவரை வைத்தியர்கள் பரிசோதிக்கின்றமையையும் நிகழ்வில் கலந்துகொண்டிருப்பவர்களையும் படங்களில் காணலாம்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் ஸ்தாபக குடும்ப உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் “இளைஞர் சக்தி ஊருக்கு ஒரு கோடி’ எனும் திட்டத்தின் கீழ், பனிக்கன்குளம் மின்னல் இளைஞர் கழகத்துக்குக் கரபந்தாட்ட மைதா னம் அமைப்பதற்கான பணிகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆரம்பித்து வைத்தார்.

கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம இளைஞர், யுவதிகள் , பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

(ச-81)




யாழ். மாவட்ட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்ப்பாணம் மகளிர் அபிவிருத்திப் பயிற்சி நிலைய மாணவிகளுக்காக துணி வகைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம், Auxilium Vocational Training Centre cum Hostel அதிபர் அருட்சகோதரி பிறின்சி, யாழ்ப் பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கள், போதனாசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச)

# உப்பு இறக்குமதி இனி தேவையில்லை – ரிசாத்

மன்னார், செப். 18

வெளிநாடுகளிலிருந்து உப்பு இறக்குமதி செய்யப்படுவதற்குப் பதில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க அமைச்சர் ரிஷாத் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மன்னார் மாந்தை உப்பளத்துக்கு விஜயம் செய்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார் மாந்தை உப்பளம் மற்றும் ஆனையிறவு உப்பளம் ஆகியவற்றின் உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்



எப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில் மூடப்பட்டுக் கிடந்த இந்த இரண்டு உப்பளங்களும் தற்போது நல்ல முறையில் செயற்படத் தொடங்கியுள்ளன.

2017 ஆம் ஆண்டாகும் போது மாந்தை உப்பளம் 6 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பையும், ஆனையிறவு உப்பளம் 5 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பையும் உற்பத்தி செய்துள்ளது.

இவற்றின் உற்பத்தித் திறனை அதிகரித்து இன்னும் இரண்டு வருடங்களுக்குள் வெளிநாடுகளிலிருந்து உப்பு இறக்குமதி செய்வது தடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காட்டுக்குள் இருந்து புத்தர் சிலை மீட்பு!



கொழும்பு, செப். 18

பொலன்னறுவையில் காட்டுக்குள்ளிருந்து விலை மதிப்புமிக்க ஐம்பொன்னிலான புத்தர்சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவையின் மெதிரிகிரிய பிரதேசத்தில் காட்டின் நடுவே மரமொன்றின் பொந்துக்குள் பத்திரிகை ஒன்றால் சுற்றப்பட்டு இந்தப் புத்தர்சிலை மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

அந்தப் பிரதேசத்தின் ஊடாக சேனைப் பயிர்ச்செய்கைக்குச் சென்ற விவசாயி ஒருவர் புத்தர் சிலையைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

அதனையடுத்து பொலிஸார் சிலையைக் கைப்பற்றியுள்ளனர்.

உட்கார்ந்த நிலையில் காணப்படும் புத்தர் சிலை, பழங்கால சிலை என்பதுடன் ஐம்பொன்னில் வார்க்கப்பட்டுள்ளதால் விலை மதிப்பற்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் எடுத்துச் செல்லும் நோக்கில் யாரேனும் இந்தச் சிலையைக் காட்டுக்குள் மறைத்து வைத்திருக்கலாம் என்று சந்தேகிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலன்னறுவையில் இரு சிறைக்கைதிகள் தப்பியோட்டம்!



கொழும்பு, செப். 18

பொலன்னறுவையில் இரண்டு சிறைக்கைதிகள் தப்பியோடியுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொலன்னறுவை, புதிய நகரப் பகுதியில் இருக்கும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட இரண்டு கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தப்பியோடிய கைதிகளை மீண்டும் கைதுசெய்வதற்காக பொலிஸாரும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கூட்டாக இணைந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அன்போடு வரவேற்றார் அருந்திகவை மஹிந்த!

கொழும்பு, செப். 18

பிரதி அமைச்சுப் பதவியைப் பறிகொடுத்த நிலையில் தன்னைச் சந்திக்க வந்த அருந்திகவை அன்போடு வரவேற்கிறேன் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிறிஸ்தவ மத விவகாரங்கள் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்த அருந்திக பெர்னாண்டோ, கடந்த வாரம் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து அவர் உடனடியாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காக, அவரின் விஜேராம இல்லத்துக்குச் சென்றிருந்தார்.

அதன்போது, அருந்திகவைக் கண்டதும் அன்போடு வரவேற்கின்றேன் என்று அவரை நட்பாக வரவேற்ற மஹிந்த ராஜபக்ஷ, மகிழ்ச்சியாக உரையாடியுள்ளார்.

அந்த நேரத்தில் அங்கிருந்த கூட்டு எதிர்க்கட்சியின் முக்கிய



தலைவர்கள் பலரும் பலத்த கர கோஷத்துடன் அருந்திகவை வரவேற்றுள்ளனர்.

அதனையடுத்துக் கருத்து வெளியிட்ட மஹிந்த ராஜபக்ஷ–

இனியும் காலம் தாழ்த்தாமல் அரசிற்குள் இருக்கும் முக்கியஸ்தர்கள் பலரையும் கூட்டு எதிர்க்கட்சிக்கு அழைத்து வருமாறும் அருந்திக பெர்னாண்டோ விடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனாதிபதி தலைமையிலான குழு நேற்று நியூயோர்க் பறந்தது!

ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்துகொள்ளும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் நியூயோர்க் சென்றுள்ளனர்.

இந்தக் குழுவினர் நேற்றுக் காலை ஈ.கே 651 விமானத்தினூடாக நியூயோர்க் சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நியூயோர்க் பயணமானார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் மூன்றாவது முறையாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ளார்.

ஐ.நா. பொதுச் சபையின் 72 ஆவது அமர்வு கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தது.

பொதுவிவாதங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாக உள்ளதுடன், பேண்தகு பூமியில் அனைவருக்குமானநல்லவாழ்க்கை மற்றும் சமாதானத்துக்கான முயற்சி ; மக்கள் மீதான கவனம் என்ற தொனிப் பொருளில் இடம் பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாளை மாலை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றவுள்ளார்.

இலங்கையில் இருக்கும் அரசியல் ஒத்துழைப்புத் தொடர்பாக உலகத் தலைவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கமளிக்கவுள்ளார்.

அத்துடன், நல்லிணக்கம், சமாதானம் மற்றும் வறுமை ஒழிப்பாக 2017 ஆம் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்ட பின்னர் அரசு முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி ஐ.நா.



பொதுச் சபையில் எடுத்துரைக்க உள்ளார்.

ஐ.நா. அமர்வில் பங்கேற்கும் உலகத் தலைவர்களுடன் பல்வேறு இருதரப்பு கலந்துரையாடல்களை ஜனாதிபதி நடத்தவுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது அமெரிக்க வாழ் ஸ்ரீலங்கா சமூகத்தினருடனும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

(க)

## அருந்திகவின் வருகையால் பெரமுனவில் சலசலப்பு!

முன்னாள் பிரதி அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ மீண்டும் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்கின்றமையை புத்தளம் மாவட்ட பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் விரும்பவில்லை என்று தெரியவந்துள்ளது. இது தொடர்பாகக் கடந்த வாரம் புத்தளம் மாவட்ட ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த விடம் முறையிட்டுள்ளனர்.

அதற்குப் பதிலளித்த அவர் கட்சியை வலுப்படுத்துவதற்காக அருந்திக மட்டுமன்றி இன்னும் பலரையும் கட்சிக்குள் உள்வாங்கும் தேவை இருப்பதாகத் தெரிவித்துள்ளார். அதேநேரம் எவர் வந்தாலும் கட்சியின் எந்தவோர் ஆதரவாளருக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது என்றும் உறுதியளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் அருந்திக பெர்னாண்டோ, புத்தளம் மாவட்டத்தில் ஏனைய அரசியல் வாதிகளின் ஆதரவாளர்கள் மீது அடாவடித் தனமான அநீதிகளைக் கட்டவிழ்த்து விட்ட சம்பவங்கள் தொடர்பான அச்சம் அங்குள்ள மக்களிடம் இன்னும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர் தி.மு.கவின் ஆட்சி மலர்வையே!

## ஸ்டாலின் தெரிவிப்பு

திண்டுக்கல்லில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவில் ஸ்டாலின் பேசி வருகின்றார். விழாவில் பேசிய அவர் தி.மு.க. எப்போது ஆட்சிக்கு வரும் என்பதே தமிழக மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு:

- நாட்டில் ஒரு பிரச்சினை என்றால் முதலில் குரல் கொடுப்பது தி.மு.கதான். தி.மு.கவை அழிக்க நினைப்பவர்களுக்கு இந்தக் கூட்டம் சரியாக அமைந்துள்ளது. தமிழகத்தை மத்திய அரசிடம் அடைவு வைத்துவிட்டது அ.தி.மு.க. அரசு. பெரும்பான்மை இல்லாத அரசு செயற்பட ஆளுநர் எப்படி அனுமதி அளிக்கிறார்? என்று தெரியவில்லை.




மேலும், நீதிமன்றம் மூலம் நல்லசெய்தி வரும். ஒரு வேளை வராவிட்டால் மக்களை திரட்டி போராட்டம் நடத்த வேண்டும். நீட் விவகாரத்தில் தமிழக மாணவர்களை நம்பவைத்து கழுத்தறுத்துவிட்டது மத்திய அரசு. நவோதயா பள்ளி என்ற பெயரில், தமிழகத்தில் ஹிந்தியைத் திணிக்க முயற்சிக்கிறது மத்திய அரசு. அதனை அ.தி.மு.க. அரசு வேடிக்கை பார்க்கின்றது.

அரை நூற்றாண்டாக ஹிந்தியை தமிழகத்திற்கு நுழைய விடவில்லை. அண்ணாவின் பெயரால் செயற்படும் அரசால் இப்போது ஹிந்தி தமிழகத்திற்குள் நுழைந்துள்ளது. நாளை முதல் தி.மு.கவுக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# ராமஜென்ம பூமி வழக்கு தொடுத்த சாமியார் சாவு

அயோத்தி.செப்.18

அயோத்தியில் சர்ச்சைக்குரிய ராமஜென்ம பூமி வழக்கு தொடுத்த அயோத்தி சாமியார் மகந்த் பாஸ்கர் தாஸ் சுவாசக் கோளாறு காரணமாகச் சாவடைந்துள்ளார்.



அயோத்தியில் சர்ச்சைக்குரிய ராமஜென்ம பூமி யாருக்கு சொந்தமானது என்பது தொடர்பாக பல தரப்பினரும் அலகாபாத் உயர் நீதிமன்ற லக்னோ அமர்வில் வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கில் தலைமை வழக்குதாரர், சாமியார், மகந்த் பாஸ்கர் தாஸ் (வயது 90) ஆவார்.

இவர் அயோத்தி நிர்மோஹி அகாடாவின் தலைமை மத குருவாகவும் நகா ஹனுமதி காதியின் மத குருவாகவும் திகழ்ந்தார்.

இந்த வழக்கில் 2010ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்றம், சர்ச்சைக்குரிய நிலத்தை சன்னி வக்பு வாரியம், நிர்மோஹி அகாரா, ராம் லல்லா ஆகிய 3 தரப்பினரும் சம அளவில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சாமியார், மகந்த் பாஸ்கர் தாஸ் மேல்முறையீடு செய்துள்ளார். அதில் 7 ஆண்டுகளுக்கு பிறகு வரும் டிசெம்பர் மாதம் விசாரணை நடைபெற உள்ளது. இந்நிலையில் மகந்த் பாஸ்கர் தாஸுக்கு கடந்த புதன்கிழமை இரவு திடீரென சுவாசக் கோளாறு ஏற்பட்டது. உடனடியாக பைசாபாத்தில் உள்ள ஹர்சன் இதய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணிக்கு மரணம் அடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# உ.பியில் 6 மாதங்களில் ரவுடிகள் 15 பேர் கொலை!

## யோகி ஆதித்யநாத் அரசு நடவடிக்கை

லக்னோ செப்.18

ரவுடிகள், குற்றவாளிகள் ஒழிக்கும் நடவடிக்கையாக உத்தர பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் தலைமையிலான அரசு ஆறு மாதத்தில் 15 பேரை ''என்கவுண்டரில்'' சுட்டுக் கொன்றுள்ளது.

உத்தரபிரதேசத்தில் இந்த ஆண்டு தொடக்கத்தில் பல கட்டங்களாக சட்டசபைத் தேர்தல் இடம்பெற்றது. இதில் பா.ஜனதா அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. கோரக்பூர் தொகுதி எம்.பியாகவும் மடாதிபதியாகவும் இருந்த யோகி ஆதித்யநாத் மார்ச் 20ஆம் திகதி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அவர் மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை நிலை நாட்டுவதில் அதிக கவனம் செலுத்தி பொலிசாருக்கு முழுச் சுதந்திரம் அளித்தார்.

முதல் கட்டமாக பொது இடங்களில் பெண்களை கிண்டல் செய்பவர்கள், இடையூறு செய்பவர்கள் மீது பொலிசார் கடும் நடவடிக்கை எடுத்தனர். தொடர்ந்து ரவுடிகள், குற்றவாளிகளை ஒழிக்கும் பணியில் ஈடுபட பொலிஸிற்கு முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டார். தேவைப்பட்டால் ''என்கவுண்டர்'' நடத்தவும் அதிகாரம் வழங்கினார்.

இதனையடுத்து யோகி ஆதித்யநாத் பதவி ஏற்ற மறுநாள் தொடங்கி செப்ரெம்பர் 14ஆம் திகதி வரை 15 என்கவுண்டர்கள் நடைபெற்று இருக்கின்றன என தகவல் வெளியாகி உள்ளது. இதில் 15 ரவுடிகள், குற்றவாளிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பொலிஸ் நடத்திய இந்த 15 என்கவுண்டரில் 84 பொது மக்களும், 88 பொலிஸாரும் காயம் அடைந்தனர். யோகி ஆதித்யநாத் பதவி ஏற்ற பின்பு 1,106 தேடப்படும் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 868 பேர் பொலிஸாரால் பரிசு அறிவிக்கப்பட்ட குற்றவாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்திய விமானப் படையின் முன்னாள் தளபதி மரணம்

இந்திய விமானப்படையின் முன்னாள் தளபதி அர்ஜன் சிங் காலமானார். 92 ஆவது வயதில் வயோதிபம் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு நேற்றுமுன்தினம் காலை மாரடைப்பு ஏற்பட்டது.

இதையடுத்து டில்லியில் உள்ள இராணுவச் சிறப்பு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இந்நிலையில் சிகிச்சை பலன் இன்றி டில்லி மருத்துவமனையில் அவர் உயிர் பிரிந்தது.

1965ஆம் ஆண்டு இந்தியா-பாகிஸ்தான் போரில் அவரது பங்களிப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்திய விமானப் படையில் 5 நட்சத்திர அந்தஸ்து பெற்ற ஒரே அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'புளூவேல் கேம்' விளையாடி தூக்குப்போட்டு தற்கொலை

போபால்.செப்.18

மத்தியப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த 11ஆம் வகுப்பு மாணவன் புளூவேல் விளையாட்டினால் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டான்.

மத்தியப்பிரதேச மாநிலம் டட்டியாவைச் சேர்ந்தவர் சிவம் டாங்கி. இவர் அங்குள்ள பாடசாலையில் 11ஆம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில் மாணவன் சிவம் டாங்கி நேற்றுமுன்தினம் தனது வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்துகொண்டார். இதுகுறித்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் மாணவனின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். தற்கொலை செய்துகொண்ட மாணவனின் கையில் புளூவேல் விளையாட்டுக்கான குறியீட்டை கத்தியால் குத்தி வரைந்து இருந்தார்.

அதன் அடிப்படையிலேயே மாணவன் புளூவேல் விளையாட்டால் தற்கொலை செய்து கொண்டமை தெரியவந்துள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir



# அணு ஆயுதங்களின் சமநிலை ஏற்படும் வரை உற்பத்தி தொடருமென மிரட்டும் வடகொரியா

பியாங்யாங்.செப்.18

அணு ஆயுத கையிருப்பில் அமெரிக்காவுக்குஇணையாகச் சமநிலை பெறும் வரையில் உற்பத்தியை தொடருவோம் என வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா சமீபத்தில் 6ஆவது தடவையாக அணு குண்டு சோதனை நடத்தியது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் முயற்சியால் ஐ.நா. பாதுகாப்புச்சபை வடகொரியா மீது பொருளாதாரத் தடை விதித்தது.

இதனால் வடகொரியா ஏவுகணைச் சோதனைகள் மற்றும் அணுஆயுதச் சோதனையை நிறுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், வடகொரியா தன் நிலையில் இருந்து மாற வில்லை. மாறாக நேற்று முன் தினம் மீண்டும் ஒரு ஏவுகணையை வீசி சோதனையை நடத்தியது.

3,200 கிலோமீற்றர் வரை செல்லக்கூடிய சக்திவாய்ந்த ஏவுகணை வடகொரியாவின் சுனான் பகுதியில் இருந்து கிழக்கு நோக்கிச் செலுத்தப்பட்டு, ஜப்பான் நாட்டின் மீது பறந்து சென்று, பசுபிக் கடலில் விழுந்தது.

ஜப்பான் நாட்டில் உள்ள குவாம் தீவில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க ராணுவ தளத்தை குறிவைத்து, மிரட்டுவதற்காக இந்த ஏவுகணை செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில், வடகொரியாவின் இந்த அத்துமீறலைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடியது. இந்தக் கூட்டத்தின் போது பாதுகாப்புச் சபையில் உள்ள 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளும் வடகொரியாவின் போக்குக்குக் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில், அணு ஆயுத கையிருப்பில் அமெரிக்காவுக்கு இணையாக சமநிலை பெறும்வரையில்உற்பத்தியை தொடருவோம் என வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார் என வடகொரியா அரசுக்குச் செந்த மானநாளேடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, அந்த நாளேட்டில் வெளியான சிறப்புக் கட்டுரையில், 'நம் மீது ஏகப்பட்ட தடைகளை விதித்துள்ள பெரிய வல்லரசு நாடுகளுக்கு நமது அணு ஆயுத வல்லமையை நாம் நிலை நாட்டிக் காட்டவேண்டும்.

இதன்மூலம், வடகொரியா மீது இராணுவ ரீதியிலான நடவடிக்கை எடுக்கும் துணிச்சல் அமெரிக்காவுக்கு ஏற்படாத வகையில் அந்நாட்டுக்கு இணையாக நமது அணு ஆயுதங்கள் கையிருப்பில் இருக்க வேண்டும்' என கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நபியை அவமதிப்பு செய்தவருக்கு மரண தண்டனை!

இஸ்லாமாபாத்.செப்.18

பாகிஸ்தான் நாட்டில் இஸ்லாம் மதத்தையும், முஹம்மது நபியையும் அவமதிக்கும் வகையில் வட்ஸ் அப் மூலம் பிரசாரம் செய்தவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தேசிய மதமான இஸ்லாம், இஸ்லாமிய வேதமான திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாம் மதத்தை வளர்த்த முஹம்மது நபி போன்றவற்றுக்கு எதிராக துவேஷமான முறையில் நடந்து கொள்பவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றும் சட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது.

இந்நிலையில், இஸ்லாம் மதத்தையும், முஹம்மது நபியையும் அவமதிக்கும் வகையில் வட்ஸ் அப் மூலம் பிரசாரம் செய்ததாக லாகூர் அருகேயுள்ள குஜராத் நகரைச் சேர்ந்த நடீம் ஜேம்ஸ்(35) என்பவர் மீது 2016ஆம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டது. சிறையில் விசாரணை கைதியாக அடைக்கப்பட்டுள்ள அவருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித் துள்ளார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யப்போவதாக ஜேம்சின் வக்கீல் ரியாஸ் அஞ்சும் தெரிவித்தார்.

## ஈராக்கில் கார்க் குண்டுத் தாக்குதல்: 2 பேர் சாவு; 10 பேர் படுகாயம்!

பாக்தாத்.செப்.18

ஈராக்கின் கிர்குக் நகரில் தீவிரவாதிகள் நடத்திய கார்க்குண்டுத் தாக்குதலில் இரண்டு பேர் பலியாகினர். மேலும் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஈராக் நாட்டின் கிர்குக் நகரம் எண்ணெய் வளம் அதிகம் நிறைந்த பகுதியாகும். குர்திஷ் அமைப்பினர் குறைந்த அளவிலேயே வசிக்கும் இந்தப் பகுதியில், நாட்டின் சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பு நடத்த இருப்பதாக குர்திஷ் அமைப்பினர் அறிவித்திருந்தனர். இதற்கு அந்நாட்டு அரசு எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், கிர்குக் நகரில் இயங்கிவரும் மதுக்கடையைக் குறிவைத்து நேற்றுமுன்தினம் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. கார் வெடிகுண்டு மூலம்



இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர் என முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் சுமார் பத்து பேர் காயம் அடைந்துள்ளனர்.

குர்திஷ் அமைப்பினரின் வாக்கெடுப்பைச் சீர்குலைக்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# மியன்மார் மீது போர் தொடுக்க வேண்டும்: பங்களாதேஷில் மக்கள் தொடர் போராட்டம்!

ரோகிங்யா முஸ்லிம்கள் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும், இப்பிரச்சினையைத் தீர்க்க மியன்மர் மீது போர் தொடுக்கவேண்டும் என்று பங்களாதேஷ் மக்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மியன்மாரில் ரக்கினே மாகாணத்தில் ரோகிங்யா முஸ்லிம்கள் அதிகளவில் உள்ளனர். இவர்களுக்கு எதிராக புத்தமதத்தினர் தாக்குதலில் ஈடுபட்டதால் கலவரம் மூண்டது. அதைத் தொடர்ந்து அங்கு வீடுகளுக்கு தீவைக்கப்பட்டது. இதனால் ஏராளமான ரோகிங்யா முஸ்லிம்கள் படு



கொலை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து உயிர் தப்பிக்க ரோகிங்யா முஸ்லிம்கள் அண்டை நாடான பங்களாதேஷிற்கு நடை பயணமாகவும், படகு மூலமாகவும் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர். கடந்த 3 வாரங்களில் மட்டும் இங்கு 4 லட்சம் ரோகிங்யா மக்கள் அகதிகளாகச் சென்றுள்ளனர்.

அவர்கள் பங்களாதேஷில் காஸ் பஜாரில் அகதிகள் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இராணுவம் உதவி செய்து வருகின்றது. மியன்மாரில் ரோகிங்யா மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு பங்களாதேஷில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை டாக்காவில் உள்ள மிகப் பெரிய பள்ளி வாசலில் தொழுகை நடைபெற்றது.

அதன் பின்னர் 5 முஸ்லிம் அமைப்பினர் ஒன்று சேர்ந்து மியன்மாருக்கு எதிராகப் போராட்டம் நடத்தினார்கள். அப்போது மியான்மரின் தேசியக் கொடி தீயிட்டு எரிக்கப்பட்டது. அந்நாட்டின் அரசு ஆலோசகர் ஆங் சாங்- சூகிக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர்.

# வி.ரி.மகாலிங்கம் இருபது - 20 முதற்சுற்று ஆட்டங்களின் முடிவுகள்

(கங்கா)

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போதைய முதற்சுற்று ஆட்டங்களின் முடிவுகள்:

**சென்றலைட்ஸ் அணி 69 ஓட்டங்களால் வெற்றி**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்றலைட்ஸ் அணி, முதலில் துடுப்பெடுத்தாடி, 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும்இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் அலன்ராஜ் 50, டர்வின் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக, சுஜிகரன், கலைச்செல்வன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், கண்ணராஜ் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

169 ஓட்டங்களை வெற்றி இலக்கை நோக்கி பதில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 99 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் விதுசன 35, கண்ணராஜ் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, கிருபன், மயூரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**சென்.பற்றிக்ஸ் அணி 53 ஓட்டங்களால் வெற்றி**

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டமொன்றில் பற்றீசியன் அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யூனியன் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. அதற்கிணங்க களமிறங்கிய பற்றீசியன் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் யூடர் 31, நிலோஜன் 24, முரளி 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யூனியன் அணி சார்பாக, பி.தயாளன் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். 166 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி, 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் பி. ஜான்சன் 20, பி.தயாளன் 21 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.



பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பாக, நோபேர்ட் 3 விக்கெட்டுகளையும், மிச்சல், கவாஸ்கர், தனேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி 88 ஓட்டங்களால் வெற்றி**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகஅணியை எதிர்த்து, நியூ ஸ்ரார் அணி மோதியது.

முதலில்துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் செந்தூரன், துவாரகசீலன் ஆகியோர் தலா 69 ஓட்டங்களையும், கல்கோவன் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யூனியன் அணி சார்பாக, ரமணன், நம்மிய இராகுலன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

199 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி, 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 110 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் நம்மியஇராகுலன் 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக, சுபேந்திரன் 3 விக்கெட்டுகளையும், ஜனந்தன், லோகதீஸன், கஜேந்திரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

**திருநெல்வேலி விளையாட்டுக்கழகம் 9 விக்கெட்டுகளால் வெற்றி**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் அணியை எதிர்த்து டிறிபேக் ஸ்ரார் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டிறிபேக்ஸ்ரார் அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் தசிந்தன் 48 ஓட்டங்களையும், பார்த்தீபன் 29 ஓட்டங்களையும், பிரவீன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக, சைலேஸ், பிருந்தன், அம்மன், சுரேஸ், பிரபு ஆகியோர் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

128 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி, 16.4 ஓவர்களில் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து, வெற்றியிலக்கை அடைந்தது, துடுப்பாட்டத்தில் தர்சிகன் 57, லவகாந்த் 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

# இ.போ.ச. அணி வெற்றி

(கங்கா)

பிரிவு 1 அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், இலங்கை போக்குவரத்துச் சபை அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை வென்றது.

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பிரிவு 1 அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணிக்கும் இலங்கை போக்குவரத்துச் சபை அணிக்கும் இடையிலான போட்டி அரியாலை உதைபந்தாட்ட பயிற்சிமைதானத்தில்நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

போட்டியின்முதற்பாதியில்இலங்கை போக்குவரத்துச் சபை அணியினர் ஒரு கோலைப் பெற்று முன்னிலை வகித்தனர்.

இரண்டாம் பாதியிலும் இலங்கை போக்குவரத்துச் சபை மேலும் ஒரு கோலைப் போட்டது. அதன் பின்னர் சென்.மேரிஸ் அணியினர் மிகவேகமாக ஆடினார்கள். அதன் பயனாக ஒரு கோல் பெறப்பட்டது. எனினும், இறுதி நேர அந்த வேகம் அணியை வெற்றி வரையில் அழைத்துச் செல்லவில்லை.

முடிவில் இலங்கை போக்குவரத்துச் சபை அணியினர் 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றனர்.

இந்தப் போட்டி நடைபெற்ற போது, ரசிகர்கள் எல்லைக்கோடு வரையில் நெருக்கமாக அமர்ந்திருந்தமையால், அடிக்கடி நடுவர்களால் போட்டியை நிறுத்தி ரசிகர்களை அகலச்செய்தனர். அத்துடன், பந்துகள் வெளியில் சென்றால் மீண்டும் எடுப்பதற்கு நேரதாமதம் ஆகியது. தேசிய ரீதியிலான போட்டியில் இவ்வாறான நிலைமை காணப்பட்டமை பலரது விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.





# பலாலி விண்மீன் அணிக்கு மூன்றாமிடம்

உரும்பிராய் சென்.மைக்கல் நடத்திய அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் மூன்றாமிடத்தை பலாலி விண்மீன் அணி தனதாக்கியது.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம், யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையில் அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது. 48 அணிகள் பங்குபற்றும்இந்தச்சுற்றுப்போட்டியின் மூன்றாமிடத்துக்கான ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணி ஒருகோலைப் பெற்று முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியிலும் விண்மின் அணி கோல் ஒன்றைப் பெற்றது. பதிலுக்கு நீக்கிலஸ் அணி ஒரு கோலை அடித்தது. முடிவில் பலாலி விண்மீன் அணி 2:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காட்சிப் போட்டியில்மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. முதல்பாதியாட்டத்தில் றோயல் அணி அடுத்தடுத்து 3 கோல்களைப் போட்டது. இரண்டாம் பாதியில் ஞானமுருகன் அணி ஒரு கோலைப் போட்டது. எனினும், விடாது ஆடிய ஊரெழு அணி ஒரு கோலைப் போட்டு, போட்டியை தனதாக்கியது.




# இலங்கையை வீழ்த்த விசேட உத்திகளுடன் களமிறங்கியதா இந்தியா?

இந்திய அணி இலங்கைக்கு கடந்த ஜூலை மாத இறுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று டெஸ்ட் போட்டிகள், ஐந்து ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரு ரி-20 போட்டி கொண்ட தொடரில் விளையாடி இருந்தது. இப்போட்டிகள் அனைத்திலும் இந்திய அணி வெற்றி பெற்று 9:0 என்கின்ற சாதனையுடன் இலங்கையைத் தோற்கடித்திருந்தது.

இந்திய அணியின் சுற்றுப்பயணம் நிறைவடைந்து இரு வாரங்கள் மாத்திரமே ஆகின்ற நிலையில் இலங்கை அணியினை வீழ்த்த இந்தியா பயன்படுத்திய தாகக் கூறப்படும் உத்திகள் அடங்கிய துண்டுப்பிரசுரமொன்று சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகின்றது.

இந்திய அணி இலங்கையுடன் மோதிய தொடர் காலியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியுடன் ஆரம்பமாகியிருந்தது. இந்தப்போட்டியின் போது இந்திய அணிக்குவழங்கப்பட்டிருந்தஓய்வறையின் சுவரில் கண்டெடுக்கப்பட்டதாக கூறப்படும் இந்தத் துண்டுப்பிரசுரத்தில் இலங்கை யின் துடுப்பாட்ட வீரர்களுக்கு எந்த வகையில் பந்து வீசலாம் என்பது பற்றிய குறிப்புக்கள் அடங்கியிருந்தன.

இலங்கையின் திமுத் கருணாரத்ன, உபுல் தரங்க, குசல் மெண்டிஸ், அஞ்சலோ மத்திவ்ஸ், நிரோஷன் திக்வெல்ல, அசேல குணரத்ன, தனஞ்ஜய டி சில்வா மற்றும் தில்ருவான் பெரேரா ஆகிய வீரர்கள் சுழல் பந்து வீச்சுக்கு எவ்வாறு செயற்படுவார்கள், வேகப்பந்து வீச்சுக்கு எவ்வாறு செயற்படுவார்கள் என்பது பற்றி மிகவும் விவரமாகவும் நுணுக்கமாகவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் துண்டுப்பிரசுரம் இந்திய அணியினால் தான் உபயோகப்படுத்தப் பட்டதா? என்பது இதுவரை உறுதிப்படுத் தப்படவில்லை. இருப்பினும், இவ்வாறாக எதிரணியின் ஒவ்வொரு வீரர்கள் பற்றியும் ஆய்வு செய்து அதனடிப்படையில் செயற்படுவது என்பது சிறந்த போட்டி உத்திகளில் ஒன்றாகும் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

காலியில் நடைபெற்ற இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான போட்டியில், இந்தியா 304 ஓட்டங்களால் இலங்கையை வெற்றி கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாமர சில்வாவுக்கு இரண்டு வருடகால போட்டி தடை!

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான சாமர சில் வாவுக்கு 2 வருடங்களுக்கு சகல கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது. போட்டி ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டுக் காரணமாகவே அவருக்கு இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உள்ளூர் முதற்தர அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டிகளின் பிரிவில் பாணந்துறை மற்றும் களுத்துறை கிரிக்கெட் கழகங்களுக்கிடையில் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி மக்கொன - சர்ரே மைதானத்தில் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் ஆட்ட நிர்ணயம் இடம்பெற் றுள்ளமை உறுதி செய் யப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அந்தக் கழகம், அதன் தலைவர்கள் மற்றும் வீரர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பாணந்துறை கிரிக்கெட் கழகத்தின் தலைவரும், இலங்கை அணியின் நட்சத்திர வீரருமான சா மர சில்வாவுக்கும், களுத்துறை கிரிக்கெட் கழகத்தின் தலைவர் மனோஜ் தேவப்பிரியவுக்கும்உடன்அமுலுக்கு வரும் வகையில் 2 வருடகால போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது.இதனையடுத்து இந்த இரு வீரர்களுக்கு எதிர்வரும் 2 வருடங்களுக்கு எந்தவொரு கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்கும், பயிற்சிகளைப் பெறுவதற்கும்தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், கிரிக்கெட் சம்பந்தமான எந்தவொரு நிர்வாகச் செயற்பாடுகளிலும் பங்குபற்றமுடியாதென இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# சுகததாஸ செயற்கை ஓடுபாதை மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பம்

குத்தகை (டெண்டர்) ஏலத்தில் ஏற்பட்ட பல்வேறு குளறுபடிகள் காரணமாக கடந்த ஒரு வருட காலமாக மறுசீரமைப்புசெய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் இருந்த சுகததாஸ விளையாட்டரங்கில் உள்ளகச் செயற்கை ஓடுபாதையின்மறுசீரமைப்புப் பணிகள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜய சேகரவின் தலைமையில் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் வீரர்கள், விளையாட்டுத்துறை அதிகாரிகளின் பங்குபற்றலுடன் வைபவ ரீதியாக இடம்பெற்றது.

2012ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஆசிய கனிஷ்ட மெய்வன்மைத் தொடருக்காக இச் செயற்கைச்சுவட்டு ஓடுபாதை அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சரினால் அவசர அவசரமாக எந்தவொரு நிறுவனத்திடமும் பகிரங்கமான முறையில் குத்தகை கோரப்படாமல் தயாரிக்கப்பட்டது. எனினும் அது தரமற்ற முறையில் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டதால் அந்தச் செயற்கை ஓடுபாதை 2013 முதல் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடந்த வருடம் இதற்கான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் ஏலதாரரின் முறைப்பாட்டினால் இரு தடவைகள் முடக்கி வைக்கப்பட்டன. ஆனால் அண்மைக்காலமாக இலங்கை மெய்வன்மை விளையாட்டின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாக விளங்கிய சுகததாஸ மைதான செயற்கை ஓடுபாதையின் மறுசீரமைப்புப் பணிகள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவின் வாக்குறுதிக்கு அமைய மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.



இதன்படி, குறித்த குத்தகையை உலக மெய்வன்மை சம்மேளனத்தின் தற்போதைய பிரதான அனுசரணையாளராகச் செயற்பட்டு வருகின்ற, உலகில் 24 முதற்தர செயற்கை ஓடுபாதைகளை அமைத்த சுவிஸ்சர்லாந்தைச் சேர்ந்த எக்செஸ் - கொனிகா (ஜே.வி) கூட்டு நிறுவனத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்டது. அம் மைதானத்தின் மறுசீரமைப்பு பணிகளை 22 கோடி ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாளொன்றுக்கு எட்டுப் பேர் இலங்கையில் தற்கொலை

கொழும்பு,செப்18
இலங்கையில்நாளொன்றுக்கு சாராசரியாக 8 பேர் தற்கொலை செய்கின்றார்கள். தற்கொலை செய்பவர்களில் ஆண்களே முன்னிலை வகிக்கின்றனர் எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸ் துறையின் தகவல்களின் படி 2015ஆம் ஆண்டு 2,389 ஆண்கள் உள்ளிட்ட 3,058 தற்கொலைகள் பதிவாகியுள்ளன. 2016ஆம் ஆண்டு 2,339 ஆண்களும் 668 பெண்களும் தற்கொலை செய்துள்ளனர்.

இந்த வருடம் முதல் 6 மாத காலங்களில்1,597தற்கொலைகள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அந்த எண்ணிக்கையில் 1,275 பேர் ஆண்கள், 322 பேர் பெண்கள் என்று அறிய முடிகின்றது.

கடந்த இரு தசாப்தங்களில் உள் நாட்டில் வருடாந்தம் தற்கொலை வீதத்தை பாதிக்கும் கூடுதலாக குறைக்க முடிந்துள்ளதாக சுகாதார அமைச்சு கூறுகின்றது.

1995ஆம் ஆண்டு 8,500 பதிவாகியிருந்த தற்கொலைகள் 2005 இல் பாதிக்கும் மேலாகக் குறைந்து 2015இல் 3,025 ஆக குறைந்துள்ளது என்றும் சுகாதார அமைச்சு அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சுகாதார அமைச்சின் உளவள ஆற்றல் சேவைகள் குறிப்பாக நாடு தழுவியதாக அரசு வைத்தியசாலைகளில் இளைஞர்களை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதன் வழியாக மன அழுத்தத்தைக் கையாளுதல், சாதகமாகசிந்தித்தல், இளைஞர்களின் ஆற்றலைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றை சுகாதார அமைச்சு எதிர்பார்க்கின்றது.

கோபம் மற்றும் முரண்பாடுகளைக் கட்டுப்படுத்தும் தன்மை மக்கள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். மது பாவனை மற்றும் உளரீதியான பிரச்சினைகள் உள்ளவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்குதல் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என உளநல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

## தன்னிச்சைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் உயர்பீடம் சந்திப்பும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும்' என்ற தலைப்பில்வெளியிடப்பட்ட அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

அரசமைப்பின் 20ஆவது திருத்தம், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை, ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையரின் இலங்கை தொடர்பான கருத்துக்கள், அதனைச்சமாளிக்கும்வகையிலான இலங்கை அரசாங்கத்தின் கபடத்தனமான செயற்பாடுகள் ஆகியவை தொடர்பில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் உயர் பீடம் கடந்த சனிக்கிழமை மாலை கூடி விரிவாக ஆராய்ந்தது.

கூட்டத்திற்கு கட்சியின் தலைவர் சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தலைமை தாங்கினார். கட்சியின் செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ந.சிவசக்தி ஆனந்தன், வடமாகாண கல்வி அமைச்சரும் கட்சியின் துணைச் செயலாளருமான கலாநிதிகந்தையாசர்வேஸ்வரன், கட்சியின் துணைத்தலைவரும்கிழக்குமாகாணசபைஉறுப்பினருமான இரா.துரைரட்ணம், முன்னாள் மன்னார் நகரசபை உறுப்பினரும் கட்சியின் பொருளாளருமான ரட்ணசிங்கம் குமரேஸ், மத்திய குழு உறுப்பினர் அருந்தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-

அரசாங்கம் முன்வைத்த 20 ஆவது திருத்தத்தையும் அந்தத் திருத்தத்திற்காகக் கொடுக்கப்பட்ட திருத்தங்களையும் ஏற்க மறுத்த உயர்நீதிமன்றம் இச்சட்டமூலம் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மீறுவதாகச் சுட்டிக்காட்டி நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் சர்வஜனவாக்கெடுப்புடனும் தான் இதனைச் சட்டமாக்க முடியும் என்று கூறியிருக்கிறது.

ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியைப்பொறுத்தவரை ஆரம்பத்திலிருந்தே 20ஆவது திருத்தத்தை பல்வேறு காரணங்களுக்காக நிராகரித்து வந்தது. அந்த நிலைப்பாட்டை அரசியல் உயர்பீடம் ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பல்வேறு தேர்தல் விஞ்ஞாபனங்களின் மூலம் முன்வைக்கப்பட்ட வடக்கு-கிழக்கு இணைப்பு, சமஷ்டி அரசமைப்பு முறை, மதச்சார்பற்ற நாடு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்பன நிராகரிக்கப்பட்டு ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான அறிக்கையாகவே வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை வருவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதால் அறிக்கை வெளிவந்ததும் மீண்டும் அரசியல்பீடம் கூடி இந்த அறிக்கை தொடர்பில் விவாதித்து மக்களுக்குத் தெளிவுபடுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அவமதித்து, ஐ.நா.வின் விருப்பத்திற்கேற்ப தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்று அமைச்சர்கள் கூறுகின்றமையை ஈ.பி.ஆர்.எல்.எவ். வன்மையாகக் கண்டிக்கிறது.

ஐ.நா. மனிதவுரிமை கவுன்ஸிலில் இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டவாறு இரண்டு வருடகால அவகாசம் கொடுத்து இலங்கை அரசாங்கத்தை குற்றவாளிக் கூண்டிலிருந்து பிணையெடுத்த பெருமை தமிழரசுக் கட்சியையே சேரும். இத்தகைய சூழலில் தமிழரசுக் கட்சி தான் விட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு இலங்கை அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தை சர்வதேச சமூகத்திற்கு வெளிச்சம்போட்டுக்காட்ட முன்வரவேண்டும் என்று சுட்டிக்காட்டுவதுடன், அதற்கான சகல நடவடிக்கைகளையும் எதிர்க்கட்சித்தலைவர் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் கலந்து பேசி ஒருமித்த முடிவுகள் எடுக்காமல் தமிழரசுக் கட்சியினர், கூட்டமைப்பு சார்பாக அறிக்கைகள் சமர்ப்பிப்பதையும் பின்னிணைப்புகள் வழங்குவதையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டிக்கிறது. இத்தகைய செயற்பாடுகள் கூட்டமைப்பின் ஜனநாயக தன்மையையும் அங்கத்துவக் கட்சிகளுக்கிடையிலான ஐக்கியத்தையும் பரஸ்பர நம்பிக்கையையும் இல்லாமற்செய்வதற்கே வழிவகுக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறது. - என்று உள்ளது. (உ-100)

## கலப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தார் எனக் கூறப்படுகிறது.

நேற்று அமெரிக்க புறப்பட முன்னர் நேற்று முன்தினம் இரவு வடமத்திய மாகாண சபையின் சு.க.உறுப்பினர்களைச் சந்தித்த சமயமே, அடுத்த மாகாண சபைத் தேர்தல் தொகுதிவாரி முறையில் நடக்கும் என்ற அறிவிப்பை ஜனாதிபதி விடுத்தார்.

இப்படிஅவர் அறிவிப்புவிடுத்த செய்தி அவரது ஊடகப் பிரிவினால் நேற்று வெளியிடவும் செய்யப்பட்டது.

மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்தும் எண்ணத்தில் ஜனாதிபதி இல்லை என்பதைப் பகிரங்கப்படுத்தவே அவரது இந்தக் கருத்து அவரது ஊடகப் பிரிவினால் முக்கியத்துவம் கொடுத்துப் பரப்பட்டதாகக் கருதப்பட்டது.

அங்கு ஜனாதிபதி தெரிவித்தவை என்று குறிப்பிட்டு அவரது ஊடகப் பிரிவு வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

தற்போதுநாட்டில்காணப்படும் விருப்பு வாக்குத் தேர்தல் முறையினால் அரசியல்வாதிகள் நாட்டைப்பற்றிசிந்திப்பதற்கு முன்னர் தமது தனிப்பட்ட அரசியல் வெற்றிக்காகவே செயற்படுகின்றனர். அதனால் நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் வெற்றிகளை அவர்களுக்காக பெற்றுக்கொடுக்க முடியாது போயுள்ளது.

அரசாங்கத்தில் காணப்படும் -அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும்- சிலதரப்பினர் எதிர்ப்பை முன்வைத்தபோதிலும் எனது தலைமையின்கீழ் விருப்புவாக்கு தேர்தல் முறைக்குப் பதிலாக தொகுதிவாரிதேர்தல் முறையின் கீழ்உள்ளூராட்சிமன்றதேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது கட்சி பேதமின்றி சகல மக்களும் பெற்றுக்கொண்ட வெற்றியாகவே நான் கருதுகிறேன்.

நாட்டில் சகல தேர்தல்களும் ஒரேமுறையில்நடைபெறவேண்டும். அதற்கேற்றவாறு அண்மையில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலை தொகுதிவாரி அடிப்படையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலையும் விருப்பு வாக்குமுறைக்கு பதிலாகதொகுதிவாரி தேர்தல் முறையில் நடத்துவதற்கு நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறேன்.

2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது என்னால் மக்களுக்கு வழங்கப்பட்ட பிரதான வாக்குறுதிகளுள் ஒன்றான இந்த விருப்பு வாக்கு தேர்தல் முறையை மாற்றியமைத்து அதற்குப் பதிலாக தொகுதிவாரி தேர்தல் முறையை இலங்கை அரசியலில் ஏற்படுத்துவதன் ஊடாக ஒட்டுமொத்த மக்களுக்கும் புதியதோர் அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் நான் மேற்கொண்டு வருகிறேன். - என்றார் ஜனாதிபதி.

இதேபோன்றகருத்தைபிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளியிட்டார்.

ஆனால், அவர் தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் ஆகியவை சேர்ந்த கலப்பு முறையிலேயே அடுத்த மாகாண சபைத் தேர்தல்கள் நடக்கும் என்று கூறியுள்ளார்.

இந்தத் தேர்தல் முறைமையின்கீழ் மாகாண சபைத்தேர்தல்களை நடத்துவதாயின், அந்த ஒழுங்குகளைச் செய்வதற்காக சுமார் ஒரு வருடமாவது காலம் எடுக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதுவரை நடக்க வேண்டிய மாகாண சபைத் தேர்தல்களை அரசு எப்படித் தள்ளிப் போடப் போகின்றது என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும். (உ)

## 20ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தல்களை உரியவேளையில் தன்பாட்டில் பிரகடனப்படுத்தி, நடத்தும் தேர்தல் ஆணையகத்தின் சுயாதீன அதிகாரத்தைத் தற்காலிகமாவேனும் தடுக்கும் விதத்திலான ஓர் ஏற்பாட்டை அரசமைப்புத்திருத்த வடிவத்தில் அடுத்தஇரண்டுவாரங்களுக்குள் நிறை வேற்ற முடியுமா என்பது குறித்தே அரசு தனது சட்ட வல்லுநர்களுடன் மல்லுக்கட்டிப் பேச்சு நடத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

இருபதாவது திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றம் கொடுத்துள்ள பதினாறு பக்கத் தீர்ப்பை இதற்கேற்றவாறு எவ்வாறு வியாக்கியானப்படுத்தலாம், அந்த வியாக்கியானத்தின் அடிப்படை யில் இருபதாவது திருத்த நகலை மாற்றியமைத்து, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபங்கு ஆதரவுடன் நிறைவேற்றுவதன் மூலம் தேர்தல் ஆணையகத்தின் உடனடித் தேர்தல் அறிவிப்பு அதிகாரத்தைக் கட்டுப்படுத்தலாமா என்பவை குறித்தே நேற்று இரவிரவாக அரச சட்ட வல்லுநர்கள் ஆராய்ந்தனர் என அறிய வந்தது. (உ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட இருந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

கூட்டு எதிரணிப் பிரமுகர்களான தினேஷ் குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என்று கூறப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொடர்பாக இந்தக்கலந்துரையாடலில் பேசப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பொருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கப்படவுள்ளன எனவும், முதற்கட்டமாக 6,000 ஆயிரம் பொருத்து வீடுகளை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது எனவும்மீள்குடியேற்ற அமைச்சு அறி வித்துள்ளது.

இந்தப் பொருத்து வீட்டுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்த்து வருகின்றமை தெரிந்ததே. (உ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள்தைரியமானவர்கள். போராட்ட குணமுடையவர்கள். தமிழர்கள் ஏனையோரைப் போன்றவர்கள் அல்லர். அவர்களிடம் நிறைய திறமை உள்ளமையை நாம் அறிவோம்.

தமிழர்கள் மீது சீனா அதிக கரிசனை கொண்டுள்ளது. ஏ-9 வீதியின் அபிவிருத்தித் திட்டத்தை சீன முதலீட்டு நிறுவனமே மேற்கொண்டது.

இதுபோல அதிகளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளோம். இது மிக விரைவில் நடக்கும். - என்று அவர் தெரிவித்துள்ளார். (உ)

## பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி நாட்டை விட்டுப் புறப்பட முன்னர், அவர் முன்பாக ருவான் விஜேவர்த்தன பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்கின்றனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி அரசாங்கம் அரசமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்காக முன்வைக்க உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்துள்ளது.

அரசாங்கம்சமஷ்டிஅடிப்படையிலானதீர்வொன்றைவழங்குவதாக அறிவித்துள்ளதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளது. அதற்காகவே புதிய அரசமைப்பொன்றை கொண்டுவரும் முனைப்பில் அரசாங்கம் செயற்படுகின்றது. - என்றும் தினேஷ் குணவர்த்தன குற்றம் சாட்டியுள்ளார்.

(தினேஷ் குணவர்த்தனவின் மேலும் சில கருத்துகள் 7ஆம் பக்கத்தில்)

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தன.

'மாகாண சபைக்களுக்கான தேர்தல் முறைமைகளை மாற்றப் போகின்றோம் என்ற அரசுத் தலைமையின் அறிவிப்பு மட்டும் தேர்தல் ஆணையகத்தைக் கட்டுப்படுத்தமாட்டாது.

"தேர்தல்கள் தொடர்பில் தேர்தல் ஆணையகத்துக்கு அரசமைப்புரீதியாக வழங்கப்பட்டுள்ள கடப்பாட்டை அது சரியாக நிறைவு செய்யும்.

"புதிய அரசமைப்புத் திருத்தங்கள் உரிய முறையில் நடைமுறைக்கு வந்து, அதன் மூலம் தேர்தல் அறிவிப்புத் தொடர்பான தேர்தல் ஆணையகத்தின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டாலன்றி - உரிய காலத்தில் தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்து நடத்துவதை யாரும் தடுக்க முடியாது." - என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# பௌத்த கலாசாரத்தை அழிக்கும் முயற்சியில் அரசு ஈடுபடுகிறது என்கிறார் அபயதிஸ்ஸ தேரர்!

கொழும்பு, செப். 18

அதிகாரத்தில் இருக்கும் நல்லாட்சி அரசு பௌத்த கலாசாரத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், கொஹுவளை சுனேத்ரா தேவி விகாரையின் பிரதம மதகுருவுமான அபயதிஸ்ஸ தேரர் சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த அரசின் அமைச்சர்கள் ஆல் காடுகள் அழிக்கப்பட்டு ஆதரவாளர்கள் குடியேற்றம் செய்யப்படுகின்றனர்.

சதொச போன்ற நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுடன் பெரிய அளவில் போதைப்பொருள்கள் கண்டெடுக்கப்படுகின்றன.

ரோஹிங்கிய அகதிகள் என்ற போர்வையில் நம் நாட்டுக்கு வருகின்றவர்களால் பெரும் சமூகச் சீர்கேடுகள் நடைபெறலாம்.

ஆனால், யாரும் இவை பற்றி கவனம் செலுத் துவதில்லை. லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் பௌத்த தர்மத்தை வளர்ப்பதற்கான நோக்கில் சில் அனுட்டானத் துணிகள் வழங்கியதற்காக சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

எனினும், அவர்கள் குறித்த செயற்பாட்டில் எதுவித தனிப்பட்ட லாபமும் பெற்றுக் கொள்ளவில்லை என்று நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலையில் எதுவித மோசடிகளும் செய்யாத அரச அதிகாரிகளான அவர்களின் சம்பளத்தைக் கொண்டு சேமித்த பணத்தில் நீதிமன்றம் விதித்துள்ள பெருந்தொகை அபராதப் பணத்தை செலுத்தமுடியாது.

அதன் காரணமாகவே பௌத்த பிக்குமார் பிச்சைப் பாத்திரம் ஏந்தி அவர்களுக்காக நிதி சேகரிக்கின்றனர்.

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தண்டனை பௌத்த தர்மத்துக்கு எதிரான சதியாகும்.

பௌத்த கலாசாரத்தை அழிப்பதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்ட வகையிலான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் மெதகொட அபய திஸ்ஸ தேரர் தொடர்ந்தும் குற்றம் சாட்டியுள்ளார். (க)

## அரைகுறையாக எரிக்கப்படும் சடலங்களால் மக்கள் சிரமம்!

### எச்சங்களை இழுத்துச் செல்லும் மிருகங்கள்

கொழும்பு, செப். 18

அனுராதபுரம் மயானத்திற்கு ஒப்படைக்கப்படும் சடலங்கள் அரை குறையாக எரிக்கப்படுகின்றன என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனால், இந்தச் சடலங்களின் எச்சங்களை அருகிலுள்ள காட்டிலுள்ள மிருகங்கள் இழுத்துச்செல்கின்றன எனவும், உணவுக்கு பயன்படுத்துகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



இதன் காரணமாக, அந்தப் பகுதி அச்சம் நிறைந்த பகுதியாகக் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அனுராதபுரம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது சாதாரண மட்டத்தில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சடலங்களை அரை குறையாக எரிப்பதனால் மீதமாகும் எரிவாயுவைச் சேகரித்து நகரசபைக்கு தெரியாமல் மோசடி வர்த்தகம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறது என்றும் தெரிய வந்துள்ளது.

இந்த நடவடிக்கை நீண்ட காலமாக முன்னெடுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்படுகிறது. இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபரை கைது செய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கலைப்பீடத்தின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் முழுநேர பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமாவுக்கான கற்கை நெறிகள் நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகின்றன என்று பதிவாளர் அறிவித்துள்ளார். (இ

## கைவேலி வீட்டுத் திட்டத்தில் மக்கள் வாழமுடியாத நிலை!







யாழ்ப்பாணம், செப். 18

விடுதலைப்புலிகளின் காலத்தில் செயற்படுத்தப்பட்ட கைவேலி 25 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்த மக்கள் இறுதிப் போரின் பின்னர் மீள அவ்விடத்தில் வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கைவேலி 25 வீட்டுத்திட்ட மக்களை வடமாகாணசபை உறுப்பினர் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பொதுமக்கள் தெரிவித்தவை வருமாறு:-

மீள்குடியேற வருகைதந்த போது பாதுகாப்பு அறிவித்தல் ஊடாக இவ்விடப்பரப்பு தடை செய்யப்பட்ட இடமாக காட்டப்பட்டிருந்தது.

பின்னர் அறிவித்தல் பலகை எடுக்கப்பட்டதும் வனவளப் பாதுகாப்புப் பிரிவினரால் எல்லைக் கற்கள் இடப்பட்டுள்ளன.

நாம் குடியிருக்க இடம் இல்லாது இன்று வரை உறவினர்களின் வீடுகளிலும் அவர்களின் காணிகளிலும் குடியிருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இறுதி யுத்தம் வரை தாம் வாழ்ந்திருந்த வீடுகளின் எச்சங்கள், பயன்படுத்திய கிணறுகள், நட்டுவைத்த மரங்கள், பூங்கன்றுகள் என அனைத்தையும் அவர்கள் எனக்கு காண்பித்தனர் என வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

மேலும், சந்திப்பு நிறைவில் குறைமுன்வைப்பறிக்கை ஒன்றையும் என்னிடம் கையளித்தனர். மீள்குடியேறிய காலம் தொட்டு இன்றுவரை அவர்கள் தங்களின் சொந்த இடத்திற்கு மீள்வதற்கான குரலை எழுப்பிய வண்ணம் உள்ளனர்.

மக்களின் கருத்துகள் அனைத்தையும் கேட்டறிந்தேன். இது தொடர்பில் வடமாகாண முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் முல்லை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் இது தொடர்பில் தான் கலந்துரையாடவுள்ளேன் என ரவிகரன் பொதுமக்களிடம் தெரிவித் துள்ளார். (க)

## சிறைச்சாலை வைத்தியரை இடமாற்றுங்கள் என்கிறார் ஹிருனிக்கா!

கொழும்பு, செப். 18

சிறைச்சாலை வைத்தியரை இடமாற்றுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருனிக்கா பிரேமசந்திர கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

முக்கிய பிரமுகர்களுக்கு சிறைச்சாலை வைத்தியசாலையில் விசேட சிகிச்சைகளை குறித்த வைத்தியர் மேற்கொள்வதாக ஹிருனிக்கா சுட்டிக்காட்டியுள்ளார்

ஏற்கனவே இவ்வாறு செயற்பட்ட வைத்தியசாலை வைத்தியர் இடமாற்றம் செய்யப்பட்டமையையும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை சிறை அதிகாரிகளின் முறைகேடு காரணமாக ஆயுள் தண்டனை சிறைக்கைதிகள் சிலர் சுக போகம் அனுபவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# கூட்டாட்சி முறைமையின் கீழ் நாட்டைப் பிரித்து பயங்கரவாதிகளிடம் ஒப்படைக்க முயற்சியாம்!

### அரசு மீது ரியர் அட்மிரல் சரத் விஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.18

எமதுபடையினர்தமது உயிரை இழந்து – தங்களை ஊனப்படுத்தி – காப்பாற்றியஇந்தநாட்டை மீண்டும் பயங்கரவாதிகளிடம் கூட்டாட்சி முறைமையின் கீழ் பிரித்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முற்படுகிறது.

–இவ்வாறு முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் விஜயசேகரதெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தையும், பிக்குகளையும் விமர்சிப்பவர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காதில் பிடித்து அமைச்சரவையில்இருந்துஇழுத்து வீச வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சரத் பொன்சேகா தனது தனிப்பட்ட நலனுக்காக முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரியவைசர்வதேசபோர்க் குற்ற நீதிமன்றில் காட்டிக் கொடுக்கின்றார். தமிழீழத்தைக் கோரிப் போராடும் புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கு ஏற்ப சரத் பொன்சேகா செயற்படுகின்றார்.

இராணுவத்தையும், பிக்குளையும்விமர்சிப்பவர்களை ரணில்விக்கிரம சிங்ககாதில்பிடித்துஅமைச்சரவையில் இருந்து இழுத்து வீச வேண்டும்.

படையினர் மீதும் இந்த நாட்டின் மீதும் அக்கறைவைத்துசெயற்படும் வண.எல்லே குணவன்ச தேரரையும்அவர் கடுமையாக விமர்சித்துள்ளார். இவ்வாறானவர்களை வைத்திருப்பதால் இந்த அரசுக்குத்தான் கெட்ட பெயர். இவரை ரணில் காதில் பிடித்து அமைச்சரவையில் இருந்து இழுத்து வீச வேண்டும்.

நாம் இன்று படிப் படியாகப் பயங்கரவாதம் என்ற சொல்லை மறந்து வருகின்றோம். அரசியல் தேவைகளுக்காக அப்பாவிமக்களைக்கொலை செய்வதுதான் பயங்கரவாதமாகும். அப்படிப்பட்ட பயங்கர வாதத்தையும் அந்தப்பயங்கரவாதத்தை நிகழ்த்தியவர்களையும் நாம் மறந்துகொண்டு வருவது வேதனையளிக்கின்றது. இப்படிப்பட்ட பயங்கர வாதத்தை அடியோடு ஒழித்தவர்கள் படையினர். 27ஆயிரம் படையினர் உயிரை இழந்து, 14ஆயிரம்படையினர் ஊனமாகித்தான் பயங்கரவாதத்தைஒழித்து நாட்டு மக்கள் இப்போது நிம்மதியாக வாழ்வதற்கு வழியேற்படுத்தினர்.

இன்றுஅந்தப்படையினரின் நிலைமை பரிதாபகரமானது. எஞ்சியிருக்கும் படையினரை இந்த அரசு நடத்தும் விதத்தைப் பாருங்கள். போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களைச் சிறையில் அடைகின்றனர். பயங்கரவாதியைச் சிறையில் இருந்து விடுவிக்கின்றனர். தப்பி ஓடும்போது படையினரால்சுடப்பட்டுஉயிரிழந்த புலிகளின் குடும்பங்களுக்குத் தலா 20 லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதை நான் கடுமையாக எதிர்க்கின்றேன்.

அது மட்டுமா? தமிழ் அரசியல்வாதிகளின் கோரிக்கைகளுக்கு இணங்கி படை முகாம்களை அகற்றி, தேசிய பாதுகாப்பைச் சிக்கலில் தள்ளியுள்ளது இந்த அரசு.காணாமல்போனோர் அலுவலகத்தை நிறுவி உயிரிழந்தபடையினரையும் புலிகளையும் சமமாக மதித்து அவர்களுக்குஇழப்பீடுவழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.அந்த அலுவலகத்தின் ஊடாகப் பொய்ச் சாட்சிகளைத் திரட்டிப் படையினரைப் பன்னாட்டுப் போர்க் குற்ற நீதிமன்றத்துக்குஅனுப்புவதற்கும் திட்டமிடுகின்றது.

ஓய்வூதியம் கேட்டுப் போராட்டம் நடத்தும் ஊனமுற்ற படையினர் மீது தாக்குதல் நடத்தி அவர்களை மேலும் காயப்படுத்துகின்றது. எமதுபடையினர்உயிரை



இழந்து – ஊனமுற்று – காப்பாற்றிய இந்தநாட்டை மீண்டும் பயங்கரவாதிகளிடம் கூட்டாட்சி முறைமையின் கீழ் பிரித்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முற்படுகிறது. இவ்வாறு படையினரைக் கவனிக்கும் ஓர் அரசு இந்த உலகில் எங்குமில்லை – என்றும் அவர் கூறினார். (உ)

## இரு மதப் பிரிவினருக்கு இடையில் கல்குடா பகுதியில் நேற்று கைகலப்பு

மட்டக்களப்பு – கல்குடா பொலிஸ் பிரிவில் இரு மதப்பிரிவினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் பெண்கள் உட்பட நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை – பேத்தாளை பிரதேசத்திலுள்ள மருதநகர் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச்சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் கல்குடா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு மதப்பிரிவினர் வழமைபோன்று ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் இருந்தவேளை மற்றுமோர் மதப் பிரிவினர் அங்கு நுழைந்தமையை அடுத்து இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் பலத்த காயங்களுக்கு உள்ளான இரு பெண்கள் உட்பட நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வாழைச்சேனை – பேத்தாளை சேமக்காலையில் உள்ள ஒரு மதத்தவரின் சபை இயங்கும் காணி தொடர்பாக இரு பிரிவினருக்கிடையில் அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இரு மதத்தவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வாகரை – திருமலை வீதியில் போக்குவரத்தும் சிறிது நேரம் தாமதமடைந்ததாகவாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தை கேள்வியுற்ற மட்டக்களப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் சம்பவ இடம் மற்றும் வைத்தியசாலைக்கு நேரடியாக சென்று பாதிக்கபட்டவர்களைபார்வையிட்டுள்ளார்.

அத்துடன் நிலைமைகளை கட்டுப்படுத்தும் முகமாகவாழைச்சேனைஉதவி பொலிஸ்அத்தியட்சகருடன் நாடாளுமன்ற உறுப்பினர் பேச்சுகளை மேற்கொண்டார். (உ)

## கூட்டு எதிரணியுடன் சேருகிறார் அருந்திக




கொழும்பு, செப்.18

எதிர்வரும் நாள்களில் தான்கூட்டுஎதிரணிப்பக்கம் அணிசேரப் போகிறார் என முன்னாள் பிரதி அமைச்சர்அருந்திகபெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்திலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டியதனால்தனது அமைச்சுப் பதவி பறிபோனது என்றார் அவர்.

அவர்பதவிவிலக்கப்பட்டதன்பின்னர்நேற்று நடைபெற்ற கூட்டு எதிர்க் கட்சியின்ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டார்.

எதிர்க் கட்சியிலிருந்துகொண்டுஅரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குதான் செயற்படப் போகிறார் எனவும் இப்போது அவர் கூறியுள்ளார்.

## கிளிநொச்சியில் நேற்று மதியம் வாள்வெட்டில் நால்வர் காயம்

கிளிநொச்சி, செப்.18

கிளிநொச்சியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்;

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றின் பின்பகுதியில் உள்ள நான்காம் வாய்க்கால் வீதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த விடுதியில் இரு இளைஞர்கள் மது அருந்திக் கொண்டிருந்த போது அவர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் அது இரு குழுக்களுக்கிடையேயான மோதலாக மாறி வாள் வெட்டில் முடிந்துள்ளது.

இதன் போதுபடுகாயமடைந்த நால்வரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டனர். அதில் ஒருவர் நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் ஏனைய மூவரும் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்

இவர்களும் ஆபதான நிலையில் இல்லை எனவும்வைத்தியசாலைவட்டாரங்கள்தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசாரணையின் போது சந்தேக நபர்கள் நால்வரின்பெயர்கள் பெறப்பட்டுள்ளன. இருந்தபோதும் இதுவரை எவரும் இதுவரை கைது செய்யப் படவில்லை என்று கூறப் பட்டது. (உ)

## மாணவிக்கு தொலைபேசி இலக்கத்தை வழங்கிய ஆசிரியருக்கு இடமாற்றம்

பரீட்சைஎழுதிக்கொண்டிருந்த மாணவிக்குத் தனது தொலைபேசி இலக்கத்தைவழங்கியவர் எனக்கூறப்படும்ஆசிரியர் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா – இறம்பைக்குளத்தில் குறித்தசம்பவம் இடம்பெற்றுள் ளது. மாணவிக்குதொலைபேசி இலக்கத்தை வழங்கிய ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களிற்கு முன்னர் இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப்பரீட்சையின் போது வவுனியாவின் பிரபல பாடசாலை ஒன்றில் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவியிடம் தொலைபேசி இலக்கத்தை வழங்கியுள்ளாராம்.

இந்த மாணவிபரீட்சை எழுதிக்கொண்டிருந்த வேளை பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளர் ஒருவர் பிறிதொரு ஆசிரியரிடம்தனதுதொலைபேசி இலக்கத்தை இந்த மாணவியிடம் கொடுக்குமாறு பணித்துள்ளார்.

மேற்பார்வையாளரின் வேண்டுகோளிற்கு இணங்க மற்றைய ஆசிரியர் தொலைபேசி இலக்கத்தை கொடுத்துள்ளார். இந்நிலையில் பரீட்சை முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட மாணவி இந்த விடயம் தொடர்பில் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

இவ்விடயம்தொடர்பில் அந்த ஆசிரியர் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ்வாறான பல முறைப்பாடுகள் இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர் தொடர்பில் இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மணலாறில் பொலிஸ் மீது கல்வீச்சுத் தாக்குதல்

முல்லைத்தீவு, மணலாறு – ஜனகபுரம் பகுதியில் மூன்று பொலிஸார் மீது கல்வீச்சு தாக்குதல் நடத்தினர் எனச் சந்தேகிக்கப்படும்2பெண்கள்உட்பட பதினாறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்ததாக்குதல்சம்பவத்தில் காயமடைந்த மூன்று பொலிஸாரும் முலைத்தீவு, வெலிஓயா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜனகபுரம் பகுதியில் போதைப் பொருள் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இந்தப்பொலிஸார் சுற்றிவளைப்பில் ஈடுபட்டமையுடன்,போதைப்பொருள் விற்பனை செய்த நபரையும் கைது செய்துள்ளனர் என்று கூறப்பட்டது.

இதனையடுத்து போதைப்பொருள்விற்பனை செய்தநபரின் குடும்பத்தார் மற்றும் உறவினர்கள் மூன்று பொலிஸார் மீதும் கல்வீச்சு தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் 16 பேரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## ஞானசாரர் தப்பினார்?

பொதுபல சேனாவின் பொதுச்செயலர்வண. கலகொடஅத்தே ஞானசார தேரர் போலி கடவுச்சீட்டு மூலம் நாட்டை விட்டு ஜப்பானுக்குத் தப்பிச் சென்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவருக்கு எதிராக பல வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் இருந்த நிலையில் அவர் தப்பியுள்ளார்.

## இரணைப்பாலையில் புயல் கட்டடங்களைப் பதம் பார்த்தது



முல்லைத்தீவு, செப்.18

முல்லைத்தீவுமாவட்டம் இரணைப்பாலை பகுதியில்நேற்றுக்காலை வீசிய புயல் காற்றினால் அப்பிரதேசத்தின் பல பகுதிகள் பாதிப்புக்குள்ளாகின.

சென். அன்ரனிஸ் இளைஞர் கழகத்தின் பொருள்களை பாதுகாக்கும் கட்டடத்தின்கூரைமுற்றாகத் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளதோடு மேலும் பல கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

ஐ.நா. சிறுவர் நிதியப் பங்களிப்புடன் தேசிய இளைஞர்சேவைமன்றத்தின்இரணைப்பாலைசென். அன்ரனிஸ் இளைஞர் கழகத்திற்கெனஅமைத்துக் கொடுக்கப்பட்ட கட்டடத்தின் கூரையே முற்றாக தூக்கி வீசப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.